MAKKAL KURAL (Independent National Tamil Daily) 12 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

RNI No. 24383/1973 TN/PMG(CCR)/WPP-675/18-20

(மலர் 48 ✱ சென்னை 10–10–2020 சனி மாலை ✱ வெளியூர் 11–10–2020 ஞாயிறு ✱ இதழ் 38)

Regd. No. TN/CC(S)DN/122/18-20

எடுக்க வேண்டிய முன்எச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?

## வடகிழக்கு பருவமழை: அமைச்சர்கள், அதிகாரிகளுடன் 12–ந் தேதி எடப்பாடி ஆலோசனை

**சென்னை, அக்.10–**

**வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து உயர் அதிகாரிகளுடன் வரும் 12–ந்தேதி (திங்கட்கிழமை) முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி ஆலோசனை நடத்த உள்ளார்.**

வடகிழக்கு பருவமழை அடுத்த வாரம் தொடங்கும் என்று வானிலை மையம் அறிவித்திருந்தது. அக்டோபர் 3–வது வாரத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்க உள்ளது. மழை தொடர்பாக மாவட்டங்களில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அரசு அதிகாரிகளுடன் முதலமைச்சர் ஆலோசனை நடத்த முடிவு



செய்துள்ளார்.

ஏரிகள், குளங்கள் உள்ளிட்ட நீர்நிலைப் பகுதிகளை தூர்வாருதல், தாழ்வான பகுதிகளில் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்தல் உள்ளிட்டவை குறித்து திங்கட்கிழமை நடைபெறும் கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட உள்ளது.

### தண்ணீர் தேங்கும் பகுதிகள்

மழைநீர் சேமிப்பு கட்டமைப்புகளை புனரமைப்பது, மழைநீர் வடிகால்வாய்களில் உள்ள மணல் மற்றும் பொருட்கள் அடைப்பு இருந்தால் அதனை சரி செய்வது, மின் இணைப்பு துண்டிக்கப்படாமல் பார்த்து கொள்வது, அதிக அளவு தண்ணீர் தேங்கும் பகுதிகளை கண்டறிந்து அங்கு தண்ணீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுப்பது, சுரங்க பாதைகளில் மழைநீர் தேங்கினால் அதனை உடனடியாக அகற்றுவது, மழை வெள்ளத்தால் பாதிக்கப்படும் மக்களை பாதுகாப்பான இடத்தில் தங்க வைத்து அவர்களுக்கு தரமான உணவு வழங்குவது, சுகாதார துறை சார்பில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இந்த கூட்டத்தில் விரிவாக ஆலோசனை நடத்துகிறார்.

இதில் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள், உயர்மட்ட அதிகாரிகள் கலந்துகொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வங்கிக் கடன் தவணைகள் ஒத்திவைப்பு காலத்தை நீட்டிக்க முடியாது: ரிசர்வ் வங்கி தகவல்

**புதுடெல்லி, அக். 10–**

**வங்கிக் கடன் தவணைகள் ஒத்திவைப்பு காலத்தை 6 மாதத்திற்கு மேல் நீட்டிப்பது சாத்தியமில்லை என்று ரிசர்வ் வங்கி சுப்ரீம் கோர்ட்டில் தெரிவித்து உள்ளது.**

கொரோனா காலத்தில் வட்டிக்கு வட்டி விதிப்பதை எதிர்த்த வழக்கில் காமத் குழுவின் பரிந்துரைகள் அடங்கிய தொகுக்கப்பட்ட பிரமாண பத்திரத்தை சுப்ரீம் கோர்ட்டில் ரிசர்வ் வங்கி தாக்கல் செய்தது.

அதில் வங்கிக் கடன் தவணைகள் ஒத்திவைப்பு காலத்தை 6 மாதத்திற்கு மேல் நீட்டிப்பது சாத்தியமில்லை என்று கூறி உள்ளது.

வங்கிக் கடன் தவணைகள் ஒத்திவைப்பு கால அவகாசத்தை மேலும் நீட்டிப்பது, கடனைத் திருப்பிச் செலுத்தும் ஒழுங்கை பாதிப்பதோடு, கடன் வழங்கும் முறையை பலவீனப்படுத்தி விடும், வாடிக்கையாளர்கள் மீதான சுமையை அதிகரிக்கச் செய்துவிடும் என கூறப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது, வட்டி மீதான வட்டி தள்ளுபடி என்ற மத்திய அரசின் திட்டம், பிரச்சினைகளை தீர்க்க தவறிவிட்டதாக சுப்ரீம் கோர்ட் அதிருப்தி தெரிவித்து, புதிதாக பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யவும் மத்திய அரசுக்கு உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## கனமழை: ஒகேனக்கல்லில் விநாடிக்கு 20 ஆயிரம் கன அடி நீர்வரத்து

**ஒகேனக்கல், அக். 10–**

**கனமழை எதிரொலியாக தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து விநாடிக்கு 20 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.**

ஒகேனக்கல் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும், காவிரியாறு தமிழகத்தை நோக்கி வரும் வழியில் அமைந்துள்ள வனப்பகுதிகளிலும் நேற்று முன்தினம் மழை பெய்தது. இந்த மழை நீர் முழுக்க காவிரியாற்றில் சேரத் தொடங்கியதால் ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரித்தது. இந்நிலையில், நேற்றிரவும் ஒகேனக்கல் உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்தது. இதனால், ஆற்றில் மேலும் அதிக அளவில் தண்ணீர் சேரத் தொடங்கியதால் ஒகேனக்கல்லில் இன்று காலை முதலே விநாடிக்கு 20 ஆயிரம் கன அடி என்ற நிலைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

அமெரிக்க அதிபர் தேர்தல்

## ஆன்லைனில் விவாதிக்க டிரம்ப் எதிர்ப்பு: பிடனுடன் நடக்கவிருந்த 2–வது விவாதம் ரத்து

**வாஷிங்டன், அக்.10–**

**அமெரிக்க அதிபர் தேர்தல் பிரசார விவாத நிகழ்ச்சி ஆன்லைனில் (விர்ச்சுவல் முறையில்) மாற்றப்பட்டதற்கு அதிபர் டிரம்ப் மறுப்பு தெரிவித்ததார். இதனால் 2வது விவாதம் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் 22–ம் தேதி நடைபெறும் மூன்றாவது விவாதத்திற்கான ஏற்பாடுகள் மட்டும் தற்போது நடந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**





அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தல், அடுத்த மாதம் நவம்பர் 3–ந் தேதி நடக்க உள்ளது. இதில், குடியரசு கட்சி சார்பில், அதிபர் டொனால்டு டிரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார். ஜனநாயகக் கட்சி சார்பில், முன்னாள் துணை அதிபர் ஜோ பிடன் போட்டியிடுகிறார். அமெரிக்க அதிபர் மற்றும் துணை அதிபர் தேர்தலின்போது, தங்கள் கொள்கைகள், சாதனைகள், திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து, இரண்டு கட்சியின் வேட்பாளர்களும் நேருக்கு நேர் விவாதம் நடத்துவர். அதிபர் வேட்பாளர்கள் 3 முறையும், துணை அதிபர் வேட்பாளர்கள் ஒரு முறையும் விவாதம் நடத்துவர்.

அந்த வகையில் ஒஹியோ மாகாணம் கிளீவ்லேண்டில் நடைபெற்ற முதல் விவாதத்தில் டிரம்ப், ஜோ பிடன் ஆகியோர் மாறி மாறி குற்றம் சாட்டினர். காரசாரமாக நடைபெற்ற இந்த விவாதம் முடிந்த சில நாட்களில் டிரம்புக்கு கொரோனா தொற்று உறுதியானது. இதனையடுத்து ராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், 4வது நாளிலேயே வெள்ளை மாளிகை திரும்பினார். கொரோனா குணமாகாமல் விரைவாக டிஸ்சார்ஜ் ஆனது குறித்து பல்வேறு தரப்பினரும் விமர்சனம் செய்தனர்.

இதனால் வரும் 15ம் தேதி நடைபெற உள்ள 2வது விவாதம் நடைபெறுமா என சந்தேகம் நீடித்தது.

அதாவது நேரடி விவாதம் வேண்டாம் விர்ச்சுவல் (ஆன்லைன் மூலம்) விவாதம் செய்யலாம் என்று ஆலோசனை வழங்கப்பட, கொரோனா பாதிக்கப்பட்ட ட்ரம்ப் விர்ச்சுவல் விவாதத்துகு ஒத்துக் கொள்ளாததால் 2வது விவாதம் இப்போது திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஆகவே இம்மாதம் 15–ந் தேதி விவாதம் இல்லை, இதனையடுத்து டெனிசீ நாஷ்வில்லில் அக்டோபர் 22–ந் தேதி ஒரு விவாதம் மீதமுள்ளது.

ட்ரம்ப் வைரஸிலிருந்து மீண்டு விட்டாரா என்பது தெரியாத நிலையில் தான் அவருடன் நேருக்கு நேர் விவாத நிகழ்ச்சியில் பங்கேற்க முடியாது என்று ஜனநாயகக் கட்சி அதிபர் வேட்பாளர் ஜோ பிடன் திட்டவட்டமாக மறுத்து விட்டார்.

### வெள்ளை மாளிகை பால்கனியிலிருந்து உரை

ஆனால் அதிபர் ட்ரம்ப் கொரோனாவிலிருந்து முழுவதும் மீண்டு விட்டாரா என்றே தெரியாத நிலையில் இன்று முதல் தேர்தல் பிரச்சாரத்தில் நேரடியாகப் பங்கேற்கவுள்ளார். வெள்ளை மாளிகை பால்கனியிலிருந்து அவர் உரையாற்றுகிறார். நூற்றுக்கணக்கானோர் மட்டுமே இந்தக் கூட்டத்துக்கு வருகை தரவுள்ளனர். அனைவரும் மாஸ்க் அணிவது கட்டாயம்.

தான் வைரசுக்காக மீண்டுமொருமுறை சோதிக்கப்பட்டதாகவும் ஆனால் முடிவு தெரியவில்லை என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார். மேலும் கொரோனா மருந்துகள் எடுத்துக் கொள்வதையும் அவர் தவிர்த்து விட்டார், 'நான் நல்ல வலுவுடன் தான் இருக்கிறேன்' என்கிறார் ட்ரம்ப்.

இந்நிலையில் ட்ரம்ப் நேரடியாகப் பிரச்சாரம் செய்வதை கிண்டல் செய்த பிடன், "குட் லக். நீங்கள் மாஸ்க் அணிந்து சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கும் வரை நான் நேரில் உங்களைச் சந்திக்கப் போவதில்லை" என்று கூறியது குறிப்பிடத்தக்கது.



## திருப்பதி ஏழுமலையான் கோவிலில் ஓ.பன்னீர்செல்வம் சாமி தரிசனம்

**திருமலை, அக்.10–**

**திருப்பதி ஏழுமலையான் கோவிலில் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் இன்று சாமி தரிசனம் செய்தார்.**

சென்னையில் இருந்து நேற்று பகல் 2.45 மணிக்கு துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், காரில் திருப்பதி புறப்பட்டு சென்றார். மாலையில் கீழ் திருப்பதியில் உள்ள பத்மாவதி தாயார் கோவிலில் தரிசனம் செய்துவிட்டு திருப்பதி மலைக்கு சென்றார். ஏற்கனவே, அங்கு சாமி தரிசனம் செய்ய வந்திருந்த அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, எம்.சி.சம்பத் ஆகியோர் அவரை வரவேற்றனர்.

### அமைச்சர்கள்

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் புரட்டாசி மாத கடைசி சனிக்கிழமையையொட்டி இன்று காலை சிறப்பு தீப ஆராதனை மற்றும் பூஜைகள் நடைபெற்றன. இதனை முன்னிட்டு நடந்த வி.ஐ.பி. தரிசனத்தில் தமிழக துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் மற்றும் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, எம்.சி.சம்பத், சரோஜா, தி.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தி.நகர் பி.சத்தியா ஆகியோர் சாமி தரிசனம் செய்தனர். இதனை தொடர்ந்து துணை முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வத்திற்கு பொன்னாடை போர்த்தப்பட்டது. பின்னர் ரங்கநாதர் மண்டபத்தில் துணை முதலமைச்சர், அமைச்சர்கள் ஆகியோருக்கு தீர்த்த பிரசாதங்களை தேவஸ்தான அதிகாரிகள் வழங்கினர். தன் கையாலேயே தேங்காய் உடைத்து ஓ.பன்னீர்செல்வம் வழிப்பட்டார்.

## எடப்பாடியை முதல்வர் வேட்பாளராக ஏற்பவர்களுடன்தான் கூட்டணி

அண்ணா தி.மு.க. துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி. முனுசாமி பேட்டி

**கிருஷ்ணகிரி, அக்.10–**

**எடப்பாடி பழனிசாமியை முதல்வர் வேட்பாளராக ஏற்பவர்களுடன் மட்டுமே கூட்டணி என அண்ணா தி.மு.க. துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி. முனுசாமி கூறி உள்ளார்.**

கிருஷ்ணகிரியில் அண்ணா திமுக துணை ஒருங்கிணைப்பாளர் கேபி முனுசாமி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

தமிழகத்தை பொறுத்தவரை நீண்ட காலமாக ஆட்சி செய்யும் இயக்கம் அண்ணா தி.மு.க. அனுபவமுள்ள இயக்கம். பல்வேறு பொதுத்தேர்தல், இடைத்தேர்தல்களை சந்தித்த இயக்கம் இது.

எடப்பாடி பழனிசாமியை முதல்வர் வேட்பாளராக ஏற்றுக்கொள்ளாத கட்சிகள் அண்ணா திமுக கூட்ணியில் இருக்க முடியாது. தேசிய கட்சியாக இருந்தாலும், மாநில கட்சியாக இருந்தாலும், எங்களால் முதல்வர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டவரை ஏற்றுக்கொள்பவர்கள் மட்டுமே கூட்டணியில் இடம்பெற முடியும். ஏற்றுகொள்ளாதவர்கள் நிச்சயம் எங்கள் கூட்டணியில் இருக்க முடியாது என கூறினார்.

சூழ்நிலைக்கு ஏற்ப அரசியல் தட்ப வெப்ப நிலையை எதிர்கொள்வோம். எங்களது தலைவர்கள் இதற்கு பாடம் கற்று தந்திருக்கிறார்கள். சூழ்நிலைக்கு ஏற்ப எங்கள் வியூகம் அமையும் என்றும் அவர் கூறினார்.

11 பேர் கொண்ட வழிகாட்டு குழுவின் அதிகாரத்தை கட்சித் தலைமை தான் முடிவு செய்யும் என்றும் அவர் கூறினார்.



# கோபம் பெரிய குற்றமா?

## சத்குரு விளக்கம்



**கேள்வி:** என் நிறுவனத்தில் எனக்கு பதவி உயர்வுக்கான வாய்ப்பு வந்தது. 'தலைமைப் பொறுப்புக்குத் தேவையான எல்லா குணங்களும் உன்னிடம் இருக்கின்றன. ஆனால், உன் முன்கோபம் எல்லாவற்றையும் பின்தள்ளிவிட்டது' என்று சொல்லி, எனக்குத் தந்திருக்க வேண்டிய பதவி உயர்வை வேறொருவருக்குத் தந்துவிட்டனர். எனக்குத் தெரிந்து எத்தனையோ தலைவர்கள் கோபக்காரர்களாகத்தானே இருந்திருக்கிறார்கள்? கோபம் என்பது அவ்வளவு பெரிய குற்றமா?

**சத்குரு:**

சினிமாக்களில், உங்கள் அபிமானத்துக்குரிய ஹீரோ சட்டென்று எல்லாவற்றுக்கும் கோபப்பட்டுப் பொங்கி எழுவதைப் பார்த்து, கோபம் ஒரு மென்மையான சக்தி என்று எண்ணிவிட்டீர்கள். சமாதானமாகப் போகிறவர்களை இந்த உலகம் மதிக்காது என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டீர்கள். அப்படித்தானே?

உங்களுக்குக் கோபம் எப்போது வருகிறது? நீங்கள் நினைத்தது நடக்கவில்லை என்றாலோ, மற்றவர்கள் உங்கள் எண்ணத்துக்கேற்ப நடக்கவில்லை என்றாலோதானே?

நீங்கள் விரும்பியபடி மற்றவர்கள் செயல்படவில்லை என்று குறைபடுவதற்கு முன், கொஞ்ச நேரம் கண் மூடி உட்காருங்கள். உங்கள் மனதை எதன்மீதாவது சில நிமிடங்களுக்குத் தொடர்ந்து நிலைநிறுத்த முடிகிறதா என்று பாருங்கள். முடிகிறதா? உங்கள் மனம் உங்கள் விருப்பத்தை மீறி, எங்கெங்கோ அலைபாய்கிறது இல்லையா?

உங்கள் மனமே நீங்கள் விரும்பியபடி இயங்காதபோது, மற்றவர்கள் உங்கள் மனதுக்கு ஏற்ப இயங்கவில்லை என்று கோபம் கொள்வது என்ன நியாயம்?

**பீட்சா டெலிவரி பையனின் அதிர்ஷ்டம்**

சங்கரன்பிள்ளை ஒரு கம்பெனியின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றார்.

"சோம்பியிருப்பவர்களுக்கு இங்கே இடமில்லை. வெளியே துரத்தப்படுவார்கள்" என்று முதல் நாளே ஊழியர்களை மிரட்டி வைத்தார்.

சொன்னதைச் செயலாற்றிக் காட்ட வேண்டும் என்கிற துடிப்பு அவருக்கு. கம்பெனியை மேற்பார்வையிட்டுக் கொண்டே ஒரு குறிப்பிட்ட அறைக்கு வந்தார். அங்கே மற்ற பணியாளர்கள் சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட்டிருக்க, ஓர் இளைஞன் மட்டும் சுவரில் சாய்ந்து நின்றிருப்பதைக் கண்டார். "ஏய், இங்கே வா!"என்று கோபமாக அழைத்தார். பதறி வந்தான் அவன்.

"உன் சம்பளம் எவ்வளவு?"

"ஐயாயிரம் ரூபாய், ஐயா!"

"என்னுடன் வா!"

விடுவிடுவென்று அவனை இழுத்துக் கொண்டு, கணக்குப் பிரிவுக்குச் சென்றார். பத்தாயிரம் ரூபாயை வாங்கி, அவனிடம் கொடுத்தார்.

"இந்தா இரண்டு மாதச் சம்பளம். இனி, இங்கே உனக்கு வேலை இல்லை. வெளியே போ!" அவன் பதில் சொல்ல வாயெடுத்தபோது, "ஒன்றும் பேசாதே. வெளியே போ!" என்று இரைந்தார். அவன் பயந்த உடனே வெளியேறி விட்டான்.

தான் மிகவும் கண்டிப்பானவன் என்பதைச் சுற்றியுள்ளவர்களுக்கு நிரூபித்துவிட்ட பெருமை, சங்கரன்பிள்ளைக்கு.

ஒரு பணியாளனைக்கிட்டே கூப்பிட்டார். "இப்போது என்ன புரிந்து கொண்டாய்?"

"பீட்ஸா டெலிவரி செய்ய வந்தவனுக்குக்கூட, நீங்கள் நினைத்தால் கொழுத்த டிப்ஸ் கிடைக்கும் என்று!" என்றான் அவன்.

கோபத்தில் இறங்கும்போது, இப்படித்தான் தாறுமாறான முடிவுகள் எடுக்க நேரிடும்.

**கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமா?**

அதற்காகக் கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் சொன்னதாகப் புரிந்து கொள்ளாதீர்கள். உங்கள் கோபத்தை ஓரிடத்தில் கட்டுப்படுத்தினால், அது வேறெங்கோ சீறி வெடிக்கும். அலுவலகத்தில் காட்ட முடியாத கோபத்தை அப்பாவி மனைவி மீதோ, குழந்தை மீதோ காட்டக்கூடும். அங்கேயும் காட்ட முடியாமல் அடக்கி வைத்திருந்தால், பி.பி எகிறும். இதயம் வெடிக்கும். பைத்தியம் பிடிக்கும்.

கோபம் என்ன, உங்கள் செல்ல நாய்க்குட்டியா? கோபத்தை எதற்காகக் கட்டுப்படுத்தி, உங்கள் கூடவே வைத்திருக்க ஆசைப்படுகிறீர்கள்? அதை முதலில் விரட்டியடிங்கள்.

ஒரு குழுவுக்கு நீங்கள் எதனால் தலைவனாக ஏற்கப்படுகிறீர்கள்? உங்களிடம் இருக்கும் தெளிவும், தொலைநோக்கும் தங்களிடம் இல்லை என்று அவர்கள் நினைப்பதால், அவர்கள் உங்களிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள்? அவர்களால் எடுக்க முடியாத முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள் என்றுதானே?

ஒன்றாக இணைந்திருக்கிறீர்கள். ஒன்றாகப் பணியாற்றுகிறீர்கள். ஒவ்வொரு கட்டத்திலும், மற்றவர்களையும் உங்களில் ஒருவராக நினைத்து, அவர்களுக்குத் தர வேண்டிய மரியாதையைத் தந்து, அவர்களுடைய கருத்துக்களையும் கேளுங்கள். அவர்களின் கருத்துக்கு மாறாக நீங்கள் முடிவு எடுக்க வேண்டி வந்தால், அது அவர்களின் நலனுக்காகத்தான் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளும்படி அன்பாக எடுத்துச் சொல்லுங்கள்.

ஒரு பறவையை நோக்கிக் கல்லை விட்டெறிந்தால், சுற்றியுள்ள நூறு பறவைகளும் பறந்துவிடும். ஒருவரிடம் கோபத்தைக் காட்டினால்கூட, மற்ற அனைவருக்குமே உங்கள் மீதுள்ள பிடிப்பும், நம்பிக்கையும் போய்விடும். ஏதாவது தவறாகும்போது, உங்களைக் குற்றம் சாட்டிவிட்டு மற்றவர்கள் தனித்தனியே கழன்று கொள்வார்கள். யாரும் உங்களுக்குத் துணை நிற்க மாட்டார்கள்.

தன்னைப் பற்றிய பொறுப்பு ஒருவனுக்கு வந்தால்தான், மற்றவர்களுக்கும் அவன் பொறுப்பேற்று வழி நடத்த முடியும். அப்படியொரு கவனமாக நோக்கத்துடன் வாழ்பவர்களால்தான் சிறந்த தலைவர்களாக விளங்க முடியும்.

## சிறுகதை

# ஆலமரம்

டாக்டர் கரூர் அ. செல்வராஜ்

உலகிற்கே உணவு கொடுக்கும் உன்னதமான தொழில் விவசாயம். அந்தத் தொழிலைத் தன் உயிரிலும் மேலாக மதித்துச் செய்து வந்தார் விவசாயி ராமசாமி. அவரது தொழிலுக்கு ஊக்கமும் உதவியும் செய்து வந்தார் அவரது மனைவி அன்பு. தம்பதியர் இவர்களுக்குப் பிறந்தது 2 மன்கள். மூத்தவன் அசோக், என்ஜினீயர். இளையவன் அருண் தனியார் வங்கியில் கிளார்க்.

விவசாயி ராமசாமி தன் 2 மகன்களையும் நன்றாகப் படிக்க வைத்து வேலையில் அமர்த்தி நல்ல குடும்பத்தில் திருமணம் செய்து வைத்தார். உரிய காலத்தில் தாத்தா என்ற நிலைக்கும் உயர்ந்தார். வயது முதிர்வு காரணமாக முன்புபோல விவசாயத்தில் முழுமையான வேகத்தோடு வேலை செய்ய முடியாததால் அவ்வப்போது விவசாய வேலைக்கு ஆட்களை வைத்து சமாளித்து வந்தார்.

விடுமுறையில் குடும்பத்தோடு சொந்த ஊருக்கு வந்த அசோக் இரவு உணவுக்குப் பிறகு தன் அப்பா ராமசாமியுடன் பேச்சை ஆரம்பித்தான்.

'அப்பா!'

'சொல்லுப்பா அசோக்'

'அப்பா, உங்களுக்கு 65 வயசு ஆச்சு. அம்மாவுக்கு 62 வயது ஆச்சு. இப்ப, நீங்க 2 பேரும் தாத்தா – பாட்டி ஆகிட்டீங்க. இந்த வயசுலே பேரக் குழந்தைகளைப் பார்த்து சந்தோஷப்படணும் அவங்களோடு கொஞ்சி விளையாடணும். அது மட்டுமில்லே, நேரம் தவறாமல் சத்தான சாப்பாடு சாப்பிட்டுட்டு நல்லா ஓய்வு எடுக்கணும். இதெல்லாம் சரியா நடக்கணுமின்னா நீங்க 2 பேரும் நம்ம விவாசய நிலங்களை வித்துட்டு எங்களோடு வந்து வீட்ல தங்கணும். இதை நீங்க செய்யணும்' என்றான் அசாக்.

மகன் அசோக்கின் பேச்சு தான் எதிர்பார்த்தது தான் என்பதை அறிந்து கொண்ட ராமசாமி ,

''அசோக் கண்ணு! நீ என் மகன். உன் ஆசையைச் சொல்லிட்டே. நான் என் ஆசையைக் சொல்றேன் கேளு. ஒரு மகனிடம் ஒரு அப்பா எதிர்பார்க்கிற அன்பும் ஆதரவும் அயராத பணிவிடையும் மருமகள்கிட்ட கிடைக்காது. அதை எதிர்பார்க்கவும் கூடாது. ஒரு மகனின் உறவுங்கிறது அவனுடைய மனைவி வந்த பிறகு படிப்படியாக மாற ஆரம்பிச்சு ஒரு கட்டத்துலே உறவு நிலையே சங்கிலி அறுந்த மாதிரி அறுந்து விழுந்திடும். ஆனா ஒரு மகள் உறவுங்கிறது அவளைப் பெத்த அப்பாவுக்கு ஆயுள் முழுவதும் உதவி செய்யற ஆலமரத்து விழுது மாதிரி. எனக்கு ஒரு மகள் பிறக்கலையே அப்படீங்கிற தீராத கவலை மனசுக்குள்ளே இருந்துகிட்டே இருக்குதுப்பா. உன்னையும் உன் குடும்பத்தையும் தொந்தரவு செய்ய எனக்கு விருப்பமில்லே' என்றார் ராமசாமி.

அப்பாவின் பிடிவாத குணம் மாறாது, மாற்ற முடியாதது என்பதை அறிந்திருந்த அசோக் தனது மன விருப்பம் நிறைவேற மீண்டும் ஒரு முறை அப்பாவிடம் பேசினான்.

'அப்பா!'

'சொல்லுப்பா அசோக்'

'இது தான் உங்க முடிவா...?'

'ஆமாம்பா'

'அப்பா! நீங்க மாறவே மாட்டீங்களா?'

'ஏம்பா, இப்படி பண்ணுறீங்க?'

'அசோக்! எனக்கும் உங்க அம்மாவுக்கும் வயசு ஆயிருச்சு. முதியோர்கள் ஆகிட்டோம். அதையும் மறுக்கலே. விவசாய நிலத்தை குத்தகைக்கு விடறதுக்கு முடிவு பண்ணிட்டேன். அந்தப் பணத்தை வச்சுகிட்டு மீதி இருக்கிற காலத்தை சந்தோஷமா வாழறதுன்னு திடமான முடிவையும் எடுத்துட்டேன். என்னுடைய இந்த முடிவுக்கு உங்க அம்மாவும் சம்மதிச்சுட்டா. எங்க காலத்துக்குப் பிறகு விவசாய நிலங்களை மீட்டெடுத்து வித்து நீயும் உன் தம்பி அருணும் சமமாப் பணத்தைப் பங்கு பிரிச்சுக்குங்க. உன் தாயும் தகப்பனும் சேர்ந்து உருவாக்கின குடும்பம் ஓர் ஆலமரம். அந்த மரத்திலே தோன்றிய விழுதுகள் தான் நீயும் உன் தம்பியும். ஆலமரத்துக்குத் தாங்குதல் தரவேண்டிய பொறுப்பு விழுதுகளுக்கு இருக்குது. அதை நீங்க செய்தாலும் செய்யாவிட்டாலும் உங்களைப் பத்தி எதுவும் நாங்கள் குறை சொல்லவே போறதில்லை. ஒரு ஆலமரம் தன் விழுதுகளிடம் விரோதம் காட்டாது என்பதை மட்டும் புரிந்துகொண்டு நடந்துக்குங்க. பெத்த பிள்ளைகளுக்கு எங்களின் மனம் நிறைந்த வாழ்த்து என்றென்றும் உண்டு' என்றார் ராமசாமி.

அப்பாவின் பேச்சுக்கு மறுபேச்சு பேச முடியாமல் மவுனம் காத்தான் அசோக்.

# டாக்டர் மு.வரதராசனார் நினைவு தினம்

திருவள்ளுவரின் திருக்குறளுக்கு
தெளிவான உரை எழுதி
லட்சோப லட்ச மக்களை
குறள் படிக்க வைத்த குணக்குன்று

பெற்றமனம் , கரித்துண்டு ,
கள்ளோ காவியமோ என்ற
புகழ்பெற்ற கதைகளை
எழுதிய கதாசிரியர்.
நாவல்கள், கதைகள், இலக்கியம்
நாடகம், கட்டுரை மொழிபெயர்ப்பு
என 91 நூல்கள் படைத்த
அறிவுலக மேதை !

அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில்
டி.லிட் பெற்ற முதல் தமிழறிஞர்!

சென்னை பச்சையப்பன் கல்லூரி
சென்னை பல்கலைக் கழகத்
தமிழ்த் துறைத் தலைவர்! மதுரை
காமராசர் பல்கலைக் கழகத்
துணை வேந்தர்!

சென்னை, திருப்பதி, அண்ணாமலை
பல்கலைக்கழக செனட் உறுப்பினர்!

கேரளா மைசூர் உஸ்மானியா
பெங்களூர் ஆந்திரா டெல்லி
மதுரை கேம்பிரிட்ஜ் ஆகிய
பல்கலைக் கழங்களின்
கல்வி வாரிய உறுப்பினர்!

தமிழ் ஆங்கிலம் தெலுங்கு
மலையாளம் கன்னடம் இந்தி
மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்!

கல்வி கற்க வசதியில்லார்க்கு
உதவிகள் செய்தவர்!

20 ம் நூற்றாண்டின்
இணையற்ற தமிழறிஞர்களுள்
தலைசிறந்த ஒருவர்!

இளமையில் தமிழ்
வித்வான் தேர்வில்
மாநிலத்தில்
முதலிடம் பெற்றவர்!

'சங்க இலக்கியத்தில்
இயற்கை' எனும் தலைப்பில்
முனைவர் பட்டம் பெற்றவர்!!

சென்னைப் பல்கலைக் கழகத்தில்
தமிழில் முனைவர் பட்டம்
பெற்ற முதலாமவர்!

'தமிழ் வினைச் சொற்களின்
தோற்றமும் வளர்ச்சியும்' எனும்
தலைப்பில் எம்.ஓ.எல் பெற்றவர்!

சாகித்ய அகாடமி, ஞானபீடம்
தேசிய புத்தகக் குழு, அகராதி,
நாட்டுப்புறப் பாடல், நடனக்குழு,
தமிழகம் மற்றும் ஆந்திரம்,
மத்திய அரசுப் பணிகளின்
முக்கியப் பணியாளர்களின்
தேர்வாணைக் குழு
புத்தகம், ஆட்சிமொழி, தமிழாராய்ச்சி
அனைத்திலும் உறுப்பினர்
பொறுப்பேற்று
முத்திரைகள் பதித்தவர்!

இவரது படைப்புகள் சில
திரைப்படமாகவும் வந்துள்ளன!

மு.வ. எனும் ஈரெழுத்தால்
அனைவராலும் அறியப்பட்ட
முனைவர் மு.வரதராசனார்
தானந்த பெருமகனார்!

கோள் உள்ள வரை
நாள் இருக்கும்!
நாள் உள்ள வரை
தமிழ் இருக்கும்!
தமிழ் இருக்கும் வரை
தமிழர் உள்ளவரை
மு.வ. புகழ் நிலைத்திருக்கும்!

கவிஞர் எஸ்.ராமகிருஷ்ணன்
(சிறுமுகை)



## பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ்

# ஆடவர் ஒற்றையர் இறுதி போட்டியில் ரபெல் நடால் – ஜோகோவிச் மோதல்

## இன்று மாலை பெண்கள் இறுதி போட்டி: சோபியா கெனின் – இகா ஸ்வியாடெக் மோதல்

பாரீஸ், அக். 10–

பிரெஞ்சு ஓபன் ஆடவர் ஒற்றையர் இறுதி போட்டியில் பிரபல வீரர்கள் ரபெல் நடாலும் – ஜோகோவிச்சும் மோதுகிறார்கள்.

'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடந்து வருகிறது. இதில் நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் அரைஇறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் முன்னணி வீரர் ஜோகோவிச் – 5வது இடத்தில் இருக்கும் கிரீஸ் வீரர் ஸ்டெபானோ சிட்சிபாஸை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் 6–3, 6–2, 5–7, 4–6 என்ற செட் கணக்கில் ஜோகோவிச் வெற்றி பெற்றார்.

ஜோகோவிச் பிரெஞ்சு ஓபன் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியிருப்பது 5வது முறையாகும். இந்த சீசனில் அவர் பட்டம் வென்றால் பிரெஞ்சு ஓபனில் அது அவரது 2வது பட்டமாகவும், ஒட்டுமொத்த கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் 18வது பட்டமாகவும் இருக்கும்.

### நடால்

முன்னதாக நேற்று நடைபெற்ற மற்றொரு அரையிறுதி போட்டியில் 12 முறை சாம்பியனும், உலக தரவரிசையில் 2வது இடத்தில் உள்ளவருமான ஸ்பெயின் வீரர் ரபெல் நடால், 14வது இடத்தில் உள்ள அர்ஜென்டினா வீரர் டிகோ ஸ்வாட்ஸ்மேனை எதிர்கொண்டார். இந்த ஆட்டத்தில் நடால் 6–3, 6–3, 7–6 என்ற நேர்செட்டில் ஸ்வாட்ஸ்மேனை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

பிரெஞ்சு ஓபன் போட்டியில் இதுவரை விளையாடிய 101 ஆட்டங்களில் விளையாடிய நடால் 99ல் வெற்றியடைந்துள்ளார் . அரையிறுதி, இறுதிச்சுற்று ஆட்டங்களில் 25 முறை விளையாடி அனைத்திலும் வெற்றி கண்டுள்ளார். இறுதிச்சுற்றில் 12 முறை பங்கேற்று அனைத்து ஆட்டங்களில் வெற்றி கண்டு பட்டங்களை நடால் வென்றுள்ளார்.

நாளை மாலை 6.30 நடைபெறும் பிரெஞ்சு ஓபன் ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில் பிரபல வீரர்கள் நடாலும் ஜோகோவிச்சும் மோதுகிறார்கள். இரு வீரர்களுக்கும் கடுமையான சவாலாக இது அமைந்திருக்கும்.

### பெண்கள் பிரிவு

இன்று மாலை 6.30 மணிக்கு பெண்கள் ஒற்றையர் பிரிவுக்கான இறுதி ஆட்டம் நடைபெறுகிறது. இதில் ஆஸ்திரேலிய ஓபன் சாம்பியனும் அமெரிக்காவைச் சேர்ந்த சோபியா கெனின், போலந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக்கை சந்திக்கிறார்.

## நல வாழ்வுச் சிந்தனைகள்

# உடலுக்கு கவர்ச்சி தோற்றத்தை தரும் பாதாம் பருப்பு சாப்பிடுங்கள்!

சத்தான உணவுகள் நிறைய உள்ளன. அவற்றுள் முக்கியமானது பாதாம் பருப்பு. சத்தான உணவுகளில் உடலுக்குத் தேவையான அளவு நல்ல கொழுப்பு சேர்ந்திருந்தால் அதனை சமச்சீர் உணவு என்கிறார்கள் ஊட்டச்ச சத்து நிபுணர்கள்.

ஆரோக்கியமான எலும்பு வளர்ச்சிக்கு மட்டுமின்றி கொலஸ்ட்ரால், சர்க்கரை வியாதியையும் கட்டுக்குள் வைக்க உதவும். நீண்ட நாள்களாக கால்சியம் , மாங்கனீசியம், செம்பு குறைபாடு உள்ள பெண்கள் பாதாம் பருப்பை உணவாக உட்கொள்வதன் மூலம் இழந்த சக்தியைத் திரும்பப் பெறலாம்.

பாதாம் பருப்பில் மாங்கனீசியம், செம்பு போன்ற தாதுப்பொருள்கள் நிறைய இருக்கின்றன. பாதாம் பருப்பு எலும்புகளை வலுப்படுத்தி, கவர்ச்சிகரமான தோற்றத்தை அளிக்கும்.

பாதாம் பருப்பில் பயோடின், வைட்டமின் பி12, இ ஆகிய சத்துகள் அடங்கியுள்ளன. வைட்டமின் இ சத்து அதிகம் காணப்படுவதால் இதய நோய்கள், புற்றுநோய், வயதானவர்களுக்கு வரும் அல்சைமர் நோய் ஆகியவற்றைத் தடுக்கும் ஆற்றல் உள்ளது.

பாதாமில் கார்போஹைட்ரேட் குறைவாகவும் புரதச்சத்தும் நார்ச்சத்தும் அதிகமாகவும் காணப்படுகிறது. பாதாம் பருப்பு உடல் எடையைக் குறைக்கவும் உதவுகிறது.

அவ்வப்போது ஒரு கை நிறைய வேர்க்கடலை, முந்திரிப் பருப்பு மற்றும் பாதாம் பருப்பு எடுத்துச் சாப்பிட்டு வந்தால் இதயம் சம்பந்தப்பட்ட பிரச்னைகள் ஏற்படாது.

## ஐ.பி.எல். புள்ளி விபர பட்டியல்

| அணிகள் | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளிகள் | ரன்ரேட் |
|---|---|---|---|---|---|
| 1. டெல்லி கேபிட்டல்ஸ் | 6 | 5 | 1 | 10 | + 1.267 |
| 2. மும்பை இந்தியன்ஸ் | 6 | 4 | 2 | 8 | + 1.488 |
| 3. சன் ரைசர்ஸ் ஐதராபாத் | 6 | 3 | 3 | 6 | + 0.232 |
| 4. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 5 | 3 | 2 | 6 | +0.002 |
| 5. ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் | 5 | 3 | 2 | 6 | – 1.355 |
| 6. சென்னை சூப்பர் கிங்ஸ் | 6 | 2 | 4 | 4 | – 0.371 |
| 7. ராஜஸ்தான் ராயல்ஸ் | 6 | 2 | 4 | 4 | –1.073 |
| 8. கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 6 | 1 | 5 | 2 | – 0.431 |



# 46 ரன்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வீழ்த்திய டெல்லி அணி

சார்ஜா, அக். 10–

ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் டெல்லி அணி 46 ரன்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அணியை வீழ்த்தி புள்ளி பட்டியலில் மீண்டும் முதலிடத்திற்கு வந்தது.

13வது ஐ.பி.எல். டி20 கிரிக்கெட் போட்டியின் 23வது லீக் ஆட்டம் சார்ஜாவில் நேற்று நடைபெற்றது. இதில் ஸ்டீவன் சுமித் தலைமையிலான ராஜஸ்தான் ராயல்ஸ் அணியும், ஸ்ரேயாஸ் அய்யர் தலைமையிலான டெல்லி கேபிட்டல்ஸ் அணியும் மோதின. டாஸ் பெற்ற ராஜஸ்தான் கேப்டன் ஸ்டீவன் சுமித் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி ஷிகர் தவானும், பிரித்வி ஷாவும் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் இறங்கினர். ஜோப்ரா ஆர்ச்சரின் பந்து வீச்சில் ஷிகர் தவான் 5 ரன்களிலும், பிரித்வி ஷாவும் 19 ரன்களிலும் அவுட்டானார். கேப்டன் ஸ்ரேயாஸ் அய்யர் 22 ரன்னிலும், ரிஷாப் பண்ட் 5 ரன்னிலும் அடுத்தடுத்து அவுட்டானதால் டெல்லி அணி மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டது.

அதன் பின் வந்த மார்கஸ் ஸ்டோனிஸ் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனாலும் ராஜஸ்தான் பந்து வீச்சில் அவரால் நீண்ட நேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. 39 ரன்கள் (30 பந்து, 4 சிக்சர்) எடுத்த நிலையில் அவுட்டானார். பின்னர் வந்த ஹெட்மயர் 45 ரன்களில் (24 பந்து, ஒரு பவுண்டரி, 5 சிக்சர்) வெளியேறினார். ஹர்ஷல் பட்டேல் 16 ரன்னிலும், அக்ஷர் பட்டேல் 17 ரன்னிலும் அவுட்டானார்கள். 20 ஓவர் முடிவில் டெல்லி அணி 8 விக்கெட்டுக்கு 184 ரன்கள் எடுத்தது. ராஜஸ்தான் தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர் 3 விக்கெட்டும், கார்த்திக் தியாகி, ஆன்ட்ரூ டை, திவேதியா தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

185 ரன்கள் இலக்குடன் ராஜஸ்தான் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஜோஸ் பட்லர், ஜெய்ஸ்வால் களம் இறங்கினர். பட்டலர் 13 ரன்களில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த ஸ்டீவன் சுமித் 24 ரன்னிலும், சஞ்சு சாம்சன் 5 ரன்னிலும் அவுட்டானார்கள். மறுமுனையில் நிதானமாக விளையாடிய இளம் வீரர் ஜெய்ஸ்வால் 34 ரன்களில் (36 பந்து, 1 பவுண்டரி, 2 சிக்சர்) போல்டு ஆனார். பின்னர் வந்த ராகுல் திவேதியா 38 ரன்னில் (29 பந்து, 3 பவுண்டரி, 2 சிக்சர்) அவுட்டானார். ராஜஸ்தான் அணி 19.4 ஓவர்களில் 138 ரன்னில் ஆல்அவுட் ஆனது. இதன் மூலம் டெல்லி அணி 46 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. டெல்லி தரப்பில் ரபாடா 3 விக்கெட்டும், அஸ்வின், ஸ்டோனிஸ் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதுவரை 6 ஆட்டம் விளையாடிய டெல்லி அணி 5 ஆட்டங்களில் வெற்றியை பெற்று 10 புள்ளிகளுடன் புள்ளி பட்டியலில் மீண்டும் முதலிடத்துக்கு வந்தது.




## இன்றைய போட்டிகள்

அபுதாபியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் 24 வது லீக் ஆட்டத்தில் தினேஷ் கார்த்தி தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் கே.எல். ராகுல் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் மோதுகின்றன. 4வது வெற்றியைப் பெறும் முனைப்பில் கொல்கத்தா அணி களமிறங்குகிறது. அதேநேரத்தில் இதுவரை 6 ஆட்டகள் விளையாடி அதில் ஒரே ஒரு ஆட்டத்தில் மட்டும் வெற்றி பெற்ற கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வெற்றிப் பாதைக்கு திரும்ப வேண்டிய கட்டாயத்தில் களமிறங்குகிறது.




### எம்.எஸ். தோனி – விராட் கோலி மோதல்

துபாயில் இன்று இரவு 7.30 மணிக்கு நடைபெறும் ஐ.பி. எல். டி20 கிரிக்கெட் போட்டியின் 25வது லீக் ஆட்டத்தில் எம். எஸ். தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும், விராட் கோலி தலைமையிலான ராயர் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் மோதுகின்றன.

சென்னை அணி இதுவரை 6 ஆட்டங்களில் 2 முறை வெற்றியும் (மும்பை, பஞ்சாப்புக்கு எதிராக) 4 முறை தோல்வியும் சந்தித்துள்ளதால் எஞ்சிய 8 ஆட்டங்களில் 6ல் வெற்றி பெற்றால் தான் 'பிளே ஆப்' சுற்றுக்கு செல்ல வாய்ப்பு கிடைக்கும். இனவே இனி வரும் ஆட்டங்களில் எல்லாம் வெற்றி பெறும் முயற்சியில் சென்னை அணி விளையாடிய வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அதே நேரத்தில் கோலி தலைமையிலான பெங்களூர் அணி 5 ஆட்டங்களில் 3 முறை வெற்றி பெற்றுள்ளது.

இன்றைய ஆட்டத்தில் இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் தோனியும், தற்போதைய கேப்டன் விராட் கோலியும் நேருக்கு நேர் களத்தில் மோத உள்ளதால் இது ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

## அரசு எடுத்த உறுதியான நடவடிக்கைகளால்

# தொழில் முதலீட்டில் முதல் இடத்தில் தமிழகம்

## எடப்பாடி பழனிசாமி பெருமிதம்

**சென்னை, அக்.10–**

**எங்களுடைய உறுதியான முயற்சியால் இந்தியாவின் சிறந்த முதலீட்டு இடங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்வதாக எடப்பாடி பழனிசாமி பெருமிதம் கொண்டுள்ளார்.**

கொரோனா பரவலை தடுக்கும் வகையில் போடப்பட்ட ஊரடங்கு காரணமாக பொருளாதாரம் கடுமையான வீழ்ச்சியை சந்தித்தது. இதை தொடர்ந்து ஒவ்வொரு கட்டங்களாக அறிவிக்கப்பட்ட தளர்வுகள் காரணமாக, பல்வேறு துறைகளிலும் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு வருகின்றன. கொரோனா பரவலுக்கு மத்தியில் மாநிலங்கள் வாரியாக புதிய திட்டங்களுக்கான முதலீடுகள் எந்த வகையில் இருக்கிறது? என்பதை 'பிராஜக்ட் டுடே' நிறுவனம் ஆய்வு செய்து வெளியிட்டு வருகிறது.

அந்தவகையில் கடந்த ஜூலை, ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் ஆகிய மாதங்களை உள்ளடக்கிய நடப்பு நிதி ஆண்டின் 2ம் காலாண்டில் மாநிலங்கள் வாரியாக முதலீடுகள் ஈர்க்கப்பட்டிருப்பது குறித்த புள்ளி விவரங்களை 'பிராஜக்ட் டுடே' நிறுவனம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது. இதில் 114 திட்டங்கள் மூலம் ரூ.35 ஆயிரத்து 771 கோடி முதலீடு ஈர்த்து சத்தீஷ்கார் மாநிலம் முதல் இடத்தை பிடித்துள்ளது.

### தமிழகம் 2–ம் இடம்

132 திட்டங்கள் மூலம் ரூ.23 ஆயிரத்து 332 கோடி முதலீடுகளை ஈர்த்து தமிழகம் 2ம் இடத்தை பிடித்துள்ளது. தமிழகத்தில் அதிகபட்சமாக சூரிய ஒளி மின்கலங்கள் மற்றும் தொகுப்புகள் திட்டத்துக்காக விக்ரம் சோலார் நிறுவனம் ரூ.5 ஆயிரத்து 423 கோடி முதலீடுகளை அறிவித்துள்ளது. 287 திட்டங்கள் மூலம் ரூ.19 ஆயிரத்து 959 கோடி முதலீடு ஈர்த்து கர்நாடக மாநிலம் 3ம் இடத்தையும், 229 திட்டங்கள் மூலம் ரூ.15 ஆயிரத்து 532 கோடி முதலீடுகளை ஈர்த்து குஜராத் 4ம் இடத்தையும், 182 திட்டங்கள் மூலம் ரூ.15 ஆயிரத்து 4 கோடி ஈர்த்து மராட்டியம் 5ம் இடத்தையும் பிடித்துள்ளது.

129 திட்டங்கள் மூலம் ரூ.13 ஆயிரத்து 461 கோடி ஈர்த்து உத்தரபிரதேசம் 6வது இடத்தையும், 94 திட்டங்கள் மூலம் ரூ.12 ஆயிரத்து 991 கோடி முதலீடு ஈர்த்து ஆந்திரா 7ம் இடத்தையும் பிடித்துள்ளது. நிதி ஆண்டின் 2ம் காலாண்டில் இந்திய அளவில் 2 ஆயிரத்து 219 புதிய திட்டங்களுக்கு ரூ.2 லட்சத்து 19 ஆயிரத்து 170 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பரவல் உள்ள இந்த நேரத்தில், பொருளாதார ரீதியாக முதலீடு செய்வதற்கு உகந்ததாக உள்ள மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் உயர்ந்த இடத்தை பிடித்திருக்கிறது. இதன்மூலம் கொரோனாவால் சரிவை சந்தித்த பொருளாதாரம் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு உந்துகோலாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### எடப்பாடி பெருமிதம்

இதற்கு பெருமிதம் தெரிவித்து, தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தனது டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் தமிழகத்தின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு வருவதற்கான எங்களுடைய உறுதியான முயற்சிகள் பலனை தருகின்றன. 2ம் காலாண்டுக்கான முதலீட்டு எண்களை பார்க்கும் போது மகிழ்ச்சி அளிக்கிறது. இது எங்களுடைய முயற்சிகளை உறுதிப்படுத்தும் வகையில், தமிழகத்தை, இந்தியாவின் சிறந்த முதலீட்டு இடங்களில் ஒன்றாக கொண்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



## முதலமைச்சர் வேட்பாளராக எடப்பாடி பழனிசாமி: பா.ஜ.க. தலைவர் நேரில் வாழ்த்து

**சென்னை, அக்.10–**

**அண்ணா தி.மு.க. முதலமைச்சர் வேட்பாளராக தேர்வு செய்யப்பட்டதற்கு எடப்பாடி பழனிசாமியை நேரில் சந்தித்து தமிழக பாரதீய ஜனதா தலைவர் எல்.முருகன் வாழ்த்து தெரிவித்தார்.**

தமிழகத்தில் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் அண்ணா தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் பாரதீய ஜனதா அங்கம் வகித்தது. இந்த கூட்டணி தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்த நிலையில் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் அண்ணா தி.மு.க.வின் முதலமைச்சர் வேட்பாளராக எடப்பாடி பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டார். முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை சென்னை அடையாறில் உள்ள அவருடைய முகாம் அலுவலகத்தில் தமிழக பாரதீய ஜனதா தலைவர் எல்.முருகன் நேற்று மாலை சந்தித்து பேசினார். அப்போது, மாநில பொதுச்செயலாளர் கே.டி. ராகவன் உள்பட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

இந்த சந்திப்புக்கு பிறகு வெளியே வந்த எல்.முருகன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

வேளாண் சட்டங்களை ஆதரித்து முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, விவசாயிகளிடம் விளக்கி வருகிறார். தமிழகத்தில் வேளாண் சட்டங்களை ஆதரித்ததால் அவருக்கு நன்றி தெரிவித்தோம். விவசாயிகளுக்கான மத்திய அரசின் நல உதவி திட்டத்தில் நடந்த முறைகேட்டில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும், கந்தசஷ்டி கவசத்தை இழிவுபடுத்தியவர்களை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினோம். இதேபோல அண்ணா தி.மு.க.வின் முதலமைச்சர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதற்கு எடப்பாடி பழனிசாமிக்கு வாழ்த்துகள் தெரிவித்தோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

# நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டம் அமுல்: பொன்னையன் தலைமையில் ஆய்வு

**சென்னை, அக்.10–**

**நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சட்டத்தின்படி வாரியத்தின் செயல்பாடுகள், நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பகுதி, பொதுவான கழிவுப்பொருள் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுதல், தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் மட்டம் தரம் மற்றும் மாசுபாடு, நதி மறு சீரமைப்பு மற்றும் நீர் கொள்கை இலக்கு உள்ளடக்குவதில் நீர் பயனர்கள் சங்கத்தின் பங்கு ஆகியவை குறித்த செயல்பாடுகளின் மதிப்பீட்டாய்வு குழுக் கூட்டம் காணொலி மூலம் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் துணைத்தலைவர் சி. பொன்னையன் தலைமையில் நடைபெற்றது.**

இக்கூட்டத்தில் துணைத் தலைவர் சி.பொன்னையன் கூறியதாவது:–

இந்தியாவில் வீணாகும் வெள்ள நீரின் மூலம் சுமார் 30 லட்சம் கோடி மதிப்புள்ள நெல் உற்பத்தி செய்ய முடியும். இந்த நீர் தமிழக மக்களின் தினசரி பயன்பாட்டிற்கு 476 ஆண்டுகளுக்குப் போதுமானது.

### அதிக மாசுபடுத்தும் ஆலைகள்

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, தமிழக கிராமப்புற ஒட்டுமொத்த பொருளாதார அளவை இந்தியாவிலேயே முதலிடம் என ஆக்கும் கொள்கையும் மழைநீர் சேகரிப்புத் திட்டம் மற்றும் விவசாயிகளுக்கு நற்பலனளிக்கும் குடிமாரமத்துத் திட்டத்திற்கு 2020–21–ம் ஆண்டு சுமார் ரூ.500 கோடி செலவில் 34 மாவட்டங்களில் மொத்தம் 1,387 பணிகளுக்குக் குடிமராமத்துத் திட்டத்தின் கீழ் செயல்படுத்த ஆணைவழங்கியுள்ளார். இத்திட்டம் மக்களிடையே மிகச் சிறந்த திட்டம் என்ற வரவேற்பை பெற்றுள்ளது. விவசாயிகளிடத்தும் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது என்று கூறினார்.

அதிக மாசுபடுத்துதல் வகையில் 17 வகை தொழிற்சாலைகள் உள்ளன. தமிழ்நாட்டில் இப்பதினேழுவகை தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 226. இவற்றுள் மின் உற்பத்தி நிலையங்கள் 72, சர்க்கரை ஆலை 43, சிமெண்ட் ஆலை 25, அடிப்படை மருந்து ஆலைகள் 23, டிஸ்டில்லரி 17. தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் மூலம் 3 கோடியே 33 லட்சம் நாற்றுக்கள் 2012 முதல் 2019 வரை ரூ. 61.522 கோடி செலவில் நடப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வனத் துறைக்குப் பல்வேறு சுற்றுச்சூழல் தொடர்பான திட்டங்கள் செயல்படுத்த ரூ. 90.36 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வருடந்தோறும் 12 மீட்டர் வேகத்தில் நிலத்தடி நீர் குறைந்து கொண்டிருக்கிறது. மேற்பரப்பு நீரை அதிகரிப்பதற்கு நிலம் கிடைப்பது மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சனைகள் போன்ற தடைகள் உள்ளன. தண்ணீரை சேமிப்பதற்காக ஏரிகள் மற்றும் அணைகளை நிர்மாணிப்பதற்கான ஒரே வழி ஏரிகளை ஆழப்படுத்துதல் அகலப்படுத்துதல் ஆகும்.

சர்வதேச வேளாண் ஆராய்ச்சி பற்றிய ஆலோசனைக் குழு 2002–ம் ஆண்டு முதல் 2012–ம் ஆண்டு வரை 11 ஆண்டு காலப் பகுதியில் தமிழ்நாடு முழுவதும் நிலத்தடி நீர் சேமிப்பில் ஏற்பட்ட மொத்த மாற்றத்தினை மதிப்பிட்டது. இவ்வாய்வின் முடிவுகளில் வருடத்திற்கு 21.40 கிலோ மீட்டர் என்ற விகிதத்தில நிலத்தடி நீர் குறைவதைக் காட்டுகின்றன. இது ஆண்டு நிலத்தடி நீர் சேமிப்பான 19.81 கிலோ மீட்டர் / வருடம் மீள்நிரப்பை விட 8% அதிகமானது.

### கூவம் சுற்றுசூழல்

முதல்வர் எடப்பாடி பழனிசாமியின் வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பின்படி, ஒருங்கிணைந்த கூவம் நதி சுற்றுச்சூழல் திட்டம் மற்றும் அடையார் நதி மறுசீரமைப்புத் திட்டம் ஆகியவை நதி மறு சீரமைப்பை நோக்கமாகக் கொண்டு பொதுப்பணித்துறை, சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக ஆணையரகம், ஊரக வளர்ச்சி இயக்குநரகம், சென்னை பெருநகர நீர்வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியம், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம், சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை ஆகிய துறைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

கருத்தரங்கின் முடிவுரையில் மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் துணைத்தலைவர் சி.பொன்னையன், நீடித்த நிலைத்த வளர்ச்சியின் 6–ம் இலக்கினை 2030–க்குள் அடைய துறைகளின் மத்தியில் ஒருங்கிணைப்பு மிக முக்கியம் எனத் தெரிவித்தார்.

கருத்தரங்கில் நிலத்தடி நீர் தேவை பாதுகாப்பு, நீர் மாசுபடுதல் மற்றும் அதன் சுத்திகரிப்பு குறித்தும் தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியத்தின் முக்கியத்துவம், நீர், நிலம் மற்றும் காற்றினை மாசுபடுத்துவோரை தண்டிக்கும் அதிகாரம் ஆகியவை குறித்து உரையாற்றிய வெங்கடாசலம், இராஜா, சஜீத் உசேன், கோபாலகிருஷ்ணன், விஷ்வநாதன், மற்றும் சுதர்ஷன் ஆகியோரை பொன்னையன் பாராட்டினார்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை புதுச்சேரி மாநில அண்ணா தி.மு.க. சட்டமன்ற கட்சித் தலைவர் அன்பழகன் எம்.எல்.ஏ. நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை திரைப்பட நடிகரும், இயக்குநரும், சின்னத்திரை நடிகர் சங்கத்தின் தலைவருமான மனோபாலா நேரில் சந்தித்து மலர் கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

## கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக 2 நாட்கள் மூடப்பட்டன

# தலைமை செயலகத்தில் கிருமிநாசினி தெளிப்பு

**சென்னை, அக்.10**

**கொரோனாவைரஸ்பரவல்தடுப்பு மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகளுக்காக 2ம் சனிக்கிழமையான இன்றும், நாளையும் தலைமைச் செயலகத்துக்கு விடுமுறை அளிக்கப்பட்டு மூடப்பட்டு கிருமிநாசினி தெளிக்கப்பட்டது.**

கொரோனா தொற்றை தவிர்ப்பதற்காக ஊரடங்கு உத்தரவு நீடிக்கும் காலகட்டத்தில் பணியிட வளாகம் மற்றும் பொதுப்பகுதிகளை தொற்றில்லாமல் வைத்துக்கொள்ளவும், சுத்தப்படுத்துவதை உறுதி செய்யவும் மத்திய அரசு வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது. அதனடிப்படையில், தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசாணை ஒன்றை பிறப்பித்தது. அதன்படி, ஒவ்வொரு அரசு அலுவலகங்களும் தொற்று தடுப்பு நடவடிக்கைகளை முழு அளவில் மேற்கொள்வதற்காக 2ம் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மூடப்பட்டு சுத்திகரிப்பு பணிகள் நடத்தப்பட வேண்டும்.

அதன்படி, சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்து துறை செயலாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு பொதுத்துறை முதன்மைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) பி.செந்தில்குமார் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

அதில் கொரோனா தொற்று ஏற்படாத வகையில் அனைத்து அலுவலகங்களையும் சுத்தப்படுத்துவதற்காக 10ந் தேதி (இன்று) முழுவதும் தலைமைச் செயலகம் மூடப்பட்டு இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த இரண்டு நாட்களிலும், மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள் தலைமைச் செயலகத்துக்கு வந்து சாவிகளைப் பெற்று அங்குள்ள அலுவலகங்களைத் திறந்து தூய்மைப் பணியில் ஈடுபடுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி நோய் தடுப்பு பணிகளுக்காக தலைமை செயலகம் மற்றும் அனைத்து அரசு அலுவலகங்களும் இன்று விடுமுறை விடப்பட்டது. அலுவலகங்களில் உள்ள ஒவ்வொரு அறையிலும் மாநகராட்சி பணியாளர்கள் கிருமிநாசினி தெளித்தனர். தூய்மை பணியாளர்களை கொண்டு அறைகள் சுத்தம் செய்யப்பட்டன.



திருவள்ளூர் மவாட்ட கலெக்டர் அலுவலகத்தில், சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், ''பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்'' விழிப்புணர்வு பதாகைகளை கலெக்டர் மகேஸ்வரி ரவிக்குமார் திறந்து வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் வெ.முத்துசாமி, இணை இயக்குநர் ராணி, மாவட்ட சமூக நல அலுவலர் ராஜராஜேஸ்வரி, துணை இயக்குநர் இளங்கோவன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.


### பெயர் மாற்றம்

TILAGA TANDABANY, கணவர் பெயர்: Dhandapani, நெ.18, 9வது குறுக்கு தெரு, குமரன் நகர் விரிவு, லாஸ்பேட்டை, புதுச்சேரி –605008, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **THILAGA DHANDAPANI,** என்று அழைக்கப்படுகிறேன்.

TILAGA TANDABANY

### மகேந்திரா ஹாலிடேஸ் & ரிசார்ட்ஸ் இந்தியா லிமிடெட்

பதிவு அலுவலகம்: மகேந்திரா டவர்ஸ் 2வது தளம், 17/18, பட்டுல்லாஸ் சாலை, சென்னை–600 002.
Tel: +91 44 3988 1000, Fax: +91 44 3027 7778
இணையதளம்: www.clubmahindra.com
மின்னஞ்சல்: investors@mahindraholidays.com
சிஐஎன்: L55101TN1996PLC036595

**அறிவிப்பு**

இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் செக்யூரிட்டீஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியலிடும் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீட்டுத் தேவைகள்) விதிகள் 2015ன், விதிமுறைகள் 29 மற்றும் விதி 47 ஆகியவற்றின்படி இதர அலுவல்களுக்கு இடையே, நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்களின் மறுவரையறுக்கப்பட்ட ஆய்விற்குட்பட்டு செப்டம்பர் 30, 2020 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் அரை ஆண்டுக்கான தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து ஒப்புதல் வழங்க நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுக் கூட்டம் வியாழக்கிழமை, அக்டோபர் 29, 2020 அன்று நடத்தப்பட உள்ளது.

இந்த அறிவிப்பு நிறுவனத்தின் பங்குகள் பட்டியலிடப்பட்டுள்ள பிஎஸ்சி லிமிடெட்டின் இணையதளம் (www.bseindia.com), நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்டின் இணையதளம் (www.nseindia.com) மற்றும் நிறுவனத்தின் இணையதளம் www.clubmahindra.com ஆகியவற்றிலும் பெறக்கூடும்.

மகேந்திரா ஹாலிடேஸ் & ரிசார்ட்ஸ் இந்தியா லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
தன்ராஜ் முல்கி
பொதுச் சட்ட ஆலோசகர் மற்றும் கம்பெனி செயலாளர்

இடம் : மும்பை
தேதி : அக்டோபர் 9, 2020

### PUBLIC NOTICE

This is to inform the general public that my client Mr. M. Babulal Jain, Son of Mangilal Jain, residing at Old No.4/2, New No.9, Solayappan Street, Chennai 600021 is the legal and registered owner in respect of property comprised in R.S.No. 3831/2 (Part) of Tondiarpet Revenue Village and situate at Parthasarathi Street, Coronation Nagar, Korukkupet, Chennai 600021 he having acquired the same by way of sale vide Document No. 834 of 1994 on the file of the Sub Registrar, Royapuram and has been in possession and enjoyment of the same since then.

It is informed that my client Mr. M. Babulal Jain has lost the original sale deed document No. 834 of 1994 on the file of the Sub Registrar, Royapuram, Chennai while he was travelling in an autorickshaw at Parthasarathi Street, Coronation Nagar, Korukkupet, Chennai 600021 on 25.09.2020. The same could not be traced by him inspite of diligent search. My client states that he has not created any encumbrance, charge or mortgage on the said property. Anyone having any interest or claim on the same, or in possession of the said document, is hereby called upon to file their objections with documentary proof to the undersigned within TEN days from this date, failing which it will be presumed that the above said original document is / are lost. Finder is requested to hand over the same either to me at the below mentioned address (or) to my client at the above address.

**G. Ramalingam**
Advocate and Notary Public
Egmore Bar Association, Chennai

### வேப்கோ இந்தியா லிமிடெட்

அறிவிப்பு

SHRIRAM Mutual Fund

### ஸ்ரீராம் மியூச்சுவல் பண்ட்

மூகாம்பிகா காம்ப்ளக்ஸ், 3வது தளம், 4, லேடி தேசிகாச்சாரி ரோடு, மயிலாப்பூர், சென்னை 600 004.
(முதலீட்டு மேலாளர்: ஸ்ரீராம் அசெட் மானேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்)
CIN: L65991MH1994PLC079874
பதிவு அலுவலகம்: 1006, 10வது தளம், மெடோஸ், சாகர் பிளாசா, அந்தேரி குர்லா சாலை, ஜெ.பி.நகர், அந்தேரி (கிழக்கு), மும்பை 400 059

**அறிவிப்பு**

**ஸ்ரீராம் மியூச்சுவல் பண்டின் செப்டம்பர் 30, 2020ல் முடிந்த அரையாண்டு திட்டங்களுக்கான அரையாண்டு தொகுப்பு அறிக்கையை பதிவேற்றம் செய்தல்**

ஜூன் 05, 2018 தேதியிட்ட செபி சர்குலர் எண். SEBI/HO/IMD/DF2/CIR/P/2018/92ன் படி செப்டம்பர் 30, 2020ல் முடிந்த அரையாண்டுக்கான ஸ்ரீராம் மியூச்சுவல் பண்டின் அரையாண்டு திட்டங்களுக்கான அரையாண்டு தொகுப்பு அறிக்கையை ஸ்ரீராம் அசெட் மானேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டின் இணையதளம் (www.shriramamc.com), ஸ்ரீராம் மியூச்சுவல் பண்டின் அசெட் மானேஜ்மெண்ட் கம்பெனி (AMC) மற்றும் அசோசியேஷன் ஆப் மியூச்சுவல் பண்ட்ஸ் இன் இந்தியாவின் (AMFI) இணையதளத்தில் உள்ளது. முதலீட்டாளர்கள் அரையாண்டுக்கான தொகுப்பு அறிக்கையை இணையதளத்தில் பார்வையிடலாம்/பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மேலும், முதலீட்டாளர்கள் கீழ்க்கண்ட ஏதாவது முறையில் தங்களது கோரிக்கையை சமர்ப்பித்து அரையாண்டுக்கான தொகுப்பு அறிக்கையை மின்னணு மூலமாகவோ அல்லது காகித வடிவிலோ இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

(i) பதிவு பெற்ற மின்னஞ்சல் முகவரியிலிருந்து info@shriramamc.comக்கு மின்னஞ்சல்
(ii) பதிவு பெற்ற மொபைல் எண்ணில் இருந்து +91 98756 30897 என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்
(iii) 033–2337 3012 என்ற எண்ணில் எங்களை தொடர்பு கொள்ளலாம்.
சென்னை – 600 028, இராஜா அண்ணாமலைபுரம், சாந்தோம் நெடுஞ்சாலை, ப.க.நெ.88, பு.க.நெ.149,அடுக்குமாடி குடியிருப்பு நெ.1A, பேலஸ் வியூ அப்பார்ட்மெண்ட் என்ற முகவரியில் வசித்து வந்து 15.08.2019 அன்று இறந்து போன டாக்டர் P.V.பாலநாராயணன் அவர்களுக்குரிய தொகை மற்றும் நடப்புக் கணக்கில் சேரவேண்டிய வங்கி வைப்புத் தொகை மற்றும் வங்கியில் உள்ள நடப்புக் கணக்கில் உள்ள பணத்திற்கு உரிமை கோரியுள்ளது தொடர்பான மனு, சென்னை உயர்நீதிமன்றம் மாஸ்டர் கோர்ட்டில் 19.11.2020 அன்று காலை 10.30 மணிக்கு விசாரணைக்கு வருகிறது. மேற்படியாரின் வங்கி வைப்புத் தொகை மற்றும் வங்கியில் உள்ள நடப்புக் கணக்கில் உள்ள பணத்திற்கு ஏதேனும் பாத்தியதை கோருகின்ற அனைவரும் தங்களுக்கு தக்கதென கருதினால் நீதிமன்றம் வாரிசுரிமைச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கு முன் jroriginalsidemhc@gmail.com என்கிற மின்னஞ்சல் முகவரியில் தங்களது ஆட்சேபணைகளைத் தெரிவித்துக்கொள்ளுமாறு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறார்கள்.

2020ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ம் தேதி சென்னையில் கையொப்பமிடப்பட்டது.

| | |
|---|---|
| **J. திலிப்குமார்** | **பொ.சாந்தினி ஜேஸ்மின்** |
| **மனுதாரரின் வழக்கறிஞர்** | **உதவி பதிவாளர்** |
| **நெ. 230 கூடுதல் சட்ட அறைகள்** | **முதலேற்பு பிரிவு–1** |
| **உயர்நீதிமன்றம்** | **உயர்நீதிமன்றம்** |
| **சென்னை–600 104** | **சென்னை–600 104** |

HATSUN

# ஹட்சன் அக்ரோ புராடக்ட் லிமிடெட்

(CIN: L15499TN1986PLC012747)

பதிவு அலுவலகம் : "டொமைன்", கதவு எண்.1/20ஏ, ராஜீவ் காந்தி சாலை (OMR), காரப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு 600 097.

Phone: +91 44 2450 1622 Fax:+91 44 2450 1422.

Website:www.hap.in; E-mail id: secretarial@hap.in

## அறிவிப்பு

**பொருள்: கோரப்படாத டிவிடெண்ட்டுகள் மற்றும் கம்பெனியின் சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி(ஐஇபிஎப்)க்கு மாற்றுதல்)**

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கு வைப்பு, தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திரும்ப அளித்தல்) திருத்தப்பட்ட விதிகள் 2017 ('விதிகள்') விதி 6 (3) (ஏ) மற்றும் கம்பெனிகள் சட்டம் 2013('சட்டம்') பிரிவு 124(6) மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகத்தின் அறிவிப்பின்படி, இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

தொடர்ந்து ஏழு ஆண்டுகள் மற்றும் அதற்கு மேலாக டிவிடெண்ட் செலுத்தப்படாத மற்றும் கோரப்படாத பங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையத்தின் டீமேட் கணக்கிற்கு மாற்ற வேண்டும் என்ற விதி உள்ளது. (இனி ஆணையம் என்று குறிப்பிடப்படும்).

விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க, அவர்களால் கோரப்படாத பங்குகள் மற்றும் டிவிடெண்டுகள் மேற்சொன்ன விதிகளின் கீழ் ஆணையத்திற்கு மாற்றப்படும் என்று கம்பெனி/ ஆர்டிஏ–வின் பதிவுகளின்படி, சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு அவர்களின் சமீபத்திய கிடைக்கக்கூடிய முகவரியில் கம்பெனி தனிப்பட்ட அறிவிப்புகளை அனுப்பியுள்ளது.

அத்தகைய பங்குதாரர்கள் மற்றும் ஆணையத்தின் டீமேட் கணக்கிற்கு மாற்றப்பட உள்ள பங்குகளின் முழு விவரங்களையும் கம்பெனி தனது இணையதளமான www.hap.inல் பதிவேற்றியுள்ளது.

விதகளின்படி ஆணையத்திற்கு பங்குகளை மாற்றுவதற்காக, அவர்கள் வைத்துள்ள அசல் பங்கு சான்றிதழ்களுக்கு பதிலாக மாற்று பங்கு சான்றிதழ்களை கம்பெனி வழங்கும் என்பதை காகித வடிவில் வைத்துள்ள சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் மற்றும் ஆணையத்திற்கு மாற்றப்பட உள்ள பங்குகளை வைத்துள்ளவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறு மாற்று பங்கு சான்றிதழ்கள் வழங்கப்படுவதால், அவர்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள அசல் பங்கு சான்றிதழ்கள் தானாகவே ரத்தாகிவிடும். எனவே வர்த்தகம் மேற்கொள்ள முடியாது. விதிகளின்படி ஆணையத்தின் டீமேட் கணக்கிற்கு பங்குகளை மாற்ற, கம்பெனியினால் வழங்கப்படும் மாற்று பங்கு சான்றிதழ் விஷயத்தில் இணைய தளத்தில் கம்பெனியினால் பதிவேற்றம் செய்யப்பட்ட தகவல்கள் போதிய அறிவிப்பாக கருதப்படும் என்பதை பங்குதாரர்கள் மேலும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

டிசம்பர் 10, 2020 அன்றோ அல்லது நீட்டிக்கப்பட்ட தேதியிலோ சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிடமிருந்து எந்தவித தகவலையும் கம்பெனியால் பெறப்படாத பட்சத்தில், விதிகளில் கடைபிடிக்கும் தேவைக்கேற்ப, நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளின்படி கம்பெனி உரிய தேதிக்குள் கோரப்படாத டிவிடெண்டுகள் மற்றும் பங்குகளை ஆணையத்திற்கு மாற்றும்.

அந்த பங்குகள் மீது சேர்ந்துள்ள அனைத்து பலன்கள் உள்பட டிவிடெண்ட் கோரப்படாத மற்றும் ஐஇபிஎப் ஆணைத்திற்கு மாற்றப்பட்ட பங்குகளை மேலே கூறப்பட்ட விதிகளில் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றிய பின்னர் ஆணையத்திடமிருந்து திரும்பப் பெறலாம் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பங்குதாரர்களுக்கு மேற்கண்ட விஷயம் மற்றும் விதிகள் குறித்து ஏதேனும் கேள்விகள் இருந்தால், அவர்கள் கம்பெனியின் பதிவு பரிமாற்ற முகவர், இன்டக்ரேட்டட் ரிஜிஸ்திரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட், எண் 30, ரமணா ரெசிடென்சி, 4வது குறுக்கு, சம்பீஜ் சாலை, மல்லேஸ்வரம், பெங்களூர் 560 003 தொலைபேசி (080) 2346 0815 முதல் 818 வரை பேக்ஸ் (080) 2346 0819 மின்னஞ்சல் ஐடி: gopi@integratedindia.inல் அணுகலாம்.

**ஹட்சன் அக்ரோ புராடக்ட் லிமிடெட்**

இடம்: சென்னை **G. சோமசுந்தரம்**

தேதி அக்டோபர் 03, 2020 கம்பெனி செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி

## கொரோனா வைரசிலிருந்து நீரிழிவு நோயாளிகள் தப்பிக்க அப்பல்லோ மருத்துவர் உஷா அய்யாகை யோசனை

சென்னை, அக். 10

**நீரிழிவு நோயாளிகள் கொரோனா வைரசிலிருந்து தப்பிக்க, ஓ.எம்.ஆர். சாலை அப்பல்லோ மருத்துவமனை நீரிழிவு சிகிச்சை, நாளமில்லா சிகிச்சை நிபுணர் டாக்டர் உஷா அய்யாகை யோசனை தெரிவித்துள்ளார்.**



நீரிழிவு நோயாளிகளுக்கு கொரோனா (கோவிட்19) வைரஸ் தொற்று ஏற்படும் போது, ரத்த குளுக்கோஸ் அளவு அதிகமாகவோ அல்லது ஏற்ற இறக்கமாகவோ இருப்பதால் தொற்றுநோய்க்கு சிகிச்சையளிப்பது கடினமாகிறது. மேலும், நீரிழிவு கட்டுப்பாடு குறைவாக இருப்பதும் ஆபத்தை அதிகரிக்கிறது. நீரிழிவு நோயாளிகள் சமூக இடைவெளி, முகமூடி அணிவது, கைகளை கழுவுதல், உங்கள் இரத்த குளுக்கோஸ் அளவைக் கட்டுக்குள் வைத்திருப்பது போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் ஆரோக்கியத்தை புறக்கணிக்கக்கூடாது: ஆரோக்கியமாக சாப்பிடுங்கள், தவறாமல் உடற்பயிற்சி செய்யுங்கள், உங்கள் மருந்துகளை சரியான நேரத்தில் எடுத்துக்கொள்வதை உறுதிசெய்து மேலே குறிப்பிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளளுங்கள்.

உங்களால் மருத்துவமனையை அல்லது உங்கள் மருத்துவரை நேரில் பார்க்க முடியாவிட்டாலும், நீங்கள் நல்ல மருத்துவ சேவையைப் பெறலாம். நீங்கள் ஒரு தொலைபேசி அல்லது வீடியோ சந்திப்பை மேற்கொண்டு உங்கள் மருத்துவரிடம் பேசலாம்.

நாங்கள் உங்களைத் தொடர்ந்து கவனிக்கக்கூடிய வழிகளில் ஒன்று "தொலைநிலை கண்காணிப்பு" ஆகும். உதாரணமாக, நீங்கள் வீட்டில் உங்கள் சர்க்கரை அளவீடுகளை சரிபார்த்து அவற்றை உங்கள் மருத்துவரிடம் அனுப்பலாம். சில சர்க்கரை மீட்டர்கள், முடிவுகளை நேரடியாக பதிவிறக்கம் செய்து உங்கள் மருத்துவரிடம் அனுப்ப அனுமதிக்கிறது. நீங்கள் தொடர்ந்து குளுக்கோஸ் மானிட்டரையும் அணியலாம்.

உங்கள் நாடித்துடிப்பு, இரத்த அழுத்தம், எடையை வீட்டிலும் கண்காணிக்கலாம். கலோரிகள், காலடிகள், உடற்பயிற்சி, தூக்கம் ஆகியவற்றைக் கண்காணிக்க உங்களை அனுமதிக்கும் செயலிகளும் உள்ளன: இவை அனைத்தும் தொலை கண்காணிப்பின் ஒரு பகுதியாக இருக்கலாம். இவ்வாறு உஷா அய்யாகை தெரிவித்தார்.

## டெல்பி நிறுவனத்தை போர்க் வார்னர் ஏற்றது

சென்னை, அக்.10

மின்சாரம், பேட்டரியில் ஓடும் கார்கள் தயாரிக்கும் டெல்பி டெக்னாலஜீஸ் நிறுவனம் அதிகட்ச அழுத்த மின்சார இன்வெர்டர், கன்வெர்டர், பேட்டரி செயல்படுத்துதல் மற்றும் சாப்ட்வேர் வசதிகளை தயாரித்து வழங்குகிறது. இந்த நிறுவனத்தை போர்க் வார்னர் நிறுவனம் ஏற்று, ஒருங்கிணைத்து உள்ளது. இதனால் போர்க் வார்னர் நிறுவனம் பேட்டரி மின்சார பஸ்கள், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள் உற்பத்தி, விற்பனையில் மேம்பட்டு திகழும் என்று இதன் தலைவர் பிரடெரிக் லிசால்ட் தெரிவித்தார்.

இந்த கூட்டினால் போர்க் வார்னர் நிறுவனம் மின்சார வாகனங்கள், எரிபொருள் சிக்கன பேட்டரி வாகனங்களுக்கு தேவையான சாதனங்களை வழங்க முடியும்.

டெல்பி டெக்னாலஜீஸ் தொழில் நுட்பம் கூடுதல் பலனை போர்க் வார்னருக்கு அளிக்கும். இதன் மூலம் புதிய வாடிக்கையாளர்களை வரவழைக்கும்.

சுத்தமான சுகாதாரமான மாசு கட்டுப்பாடு விதிக்கு ஏற்ப செயல்படும் டெல்பி தொழில் நுட்பத்தில் கமர்சியல் வாகனங்களை விற்க முடியும். இது பற்றி அறிய www.borg warner.com வலைதளத்தை பார்க்கலாம்.

வேலூர் விஐடி 35வது பட்டமளிப்பு விழா

# ‘அறிவை வளர்த்து, கூட்டு முயற்சியை பின்பற்றி வாழ்வில் முன்னேறுங்கள்’

## இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரி ரங்கன் அறிவுறுத்தல்

வேலூர், அக். 10

**‘‘மாணவர்கள் தங்களுடைய அறிவாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும்’’ என்று காணொளி மூலம் நடைபெற்ற விஐடி பட்டமளிப்பு விழாவில் இஸ்ரோவின் முன்னாள் தலைவர் டாக்டர்.கே. கஸ்தூரிரங்கன் அறிவுறுத்தினார்.**




வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் காணொளி மூலம் 35வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது. இஸ்ரோவின் முன்னாள் தலைவரும், தேசிய கல்விக் கொள்கை குழுவின் முன்னாள் தலைவருமான டாக்டர். கே. கஸ்தூரிரங்கன் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றியதாவது:

மாணவர்கள் தங்களுடைய அறிவாற்றலை விரிவுபடுத்தி வளர்த்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் ஒரு குழுவாக சேர்ந்து பணிபுரிய கற்றுக்கொள்ளும்போது கூட்டு முயற்சியின் அனுபவங்களை பெறுவார்கள்.

நாம் நம் முன்னோர்கள் வழிவகுத்த சமுதாயத்தை பின்பற்றி வருகிறோம், நம் முன்னோர்கள் வாழ்ந்த காலகட்டத்தில் மனிதர்களின் வாழ்க்கை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள். முன்னோர்களைப் பின்பற்றி வந்த தற்போதைய மாணவர்களாகிய நீங்கள் உங்கள் அறிவை வளர்த்துக் கொள்வதோடு மட்டுமல்லாமல் கூட்டுமுயற்சியை பின்பற்றி வாழ்வில் முன்னேற வேண்டும்.

செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆகுமெண்டெட் ரியாலிட்டி என்ற இரண்டு தொழில்நுட்பம் உலக அளவில் வளர்ச்சி அடைந்து வருவதன் காரணமாக மனிதனுடைய தொழில் திறமையும் உயர்வகை தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தக் கூடிய பல்வேறு புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் சூழல் இருக்கிறது.

இதனை கருத்தில் கொண்டு உயர் கல்வி நிறுவனங்கள் மாணவ மாணவிகளுக்கு செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆகுமெண்டெட் ரியாலிட்டி தொழில்நுட்பத்தை சார்ந்த வேலைகளை கையாளக் கூடிய வகையில் மாணவர்களை தயார்படுத்த வேண்டும். இதனால் கல்வி கட்டமைப்பில் தொழிற்கல்வி முக்கியத்துவம் பெறும்.

இந்தியா பொருளாதாரத்தில் உலக அளவில் முன்னணி வகிக்க மாணவர்களின் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் வழிவகை செய்யும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### பொருளாதார நிலை உயர கல்வி அவசியம்

விஐடி பல்கலைக்கழக வேந்தர் டாக்டர் கோ. விசுவநாதன் 35வது பட்டமளிப்பு விழாவில் தலைமையுரையாற்றியதாவது,

உலகளவில் இந்தியா வேகமாக வளர்ந்து வரும் நாடு விரைவில் வளர்ந்த நாடுகள் பட்டியலில் இந்தியாவும் இணையும். இந்தியா 5 ட்ரில்லியன் பொருளாதாரம் அளவிற்கு விரைவில் உயரும், இந்தப் பொருளாதார நிலையை எட்டுவதற்கு கல்வி முக்கிய பங்கு வகிக்கும் குறிப்பாக உயர் கல்வியின் பங்கு முக்கியம் என்றார்.

நம் நாடு வளர மாணவர்கள் தங்களால் முயன்ற அளவிற்கு சிறப்பாக செயல்பட வேண்டும். விஐடி ஆராய்ச்சியில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது குறிப்பாக விஐடியில் பல்வேறு கண்டுபிடிப்புகளுக்கான வடிவங்கள் (பேட்டண்ட்) பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வடிவங்கள் அனைத்தும் மக்கள் பயன்படுத்தக்கூடிய வகையில் விரைவில் சந்தைக்கு வரும்.

தேசிய அளவில் விஐடியில் உள்ள தொழில்நுட்ப வணிக காப்பகத்தை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை பாராட்டியுள்ளது, அந்தளவிற்கு பல்வேறு புதிய ஆராய்ச்சிகளை விஐடி மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசு கல்விக்கு 6% ( ஜிடிபியில் ) சதவீத அளவிற்கு செலவிடவேண்டும், ஏழை மற்றும் நடுத்தர வர்க்கத்தை சார்ந்த மாணவ, மாணவிகள் உயர்கல்வி பெற மத்திய அரசு வழிவகை செய்யவேண்டும்.

### மருத்துவ மாணவரும் வெளிநாடு செல்லாமல் இருக்க

மருத்துவம் மற்றும் பிற படிப்புகளுக்கு இந்தியாவில் உள்ள மாணவர்கள் வெளிநாடு செல்கின்றனர், இதனை குறைக்கும் பொருட்டு மத்திய அரசு மருத்துவ மற்றும் இதர படிப்புகளுக்கு அதிக அளவிலான எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் . இதற்கு நம் பாரதப் பிரதமர் போதிய நடவடிக்கை எடுப்பார் என எதிர்பார்க்கிறோம். அதேபோல் கஸ்தூரிரங்கன் குழுவும் இதைத்தான் மத்திய அரசுக்கு பரிந்துரைத்துள்ளது.

மேலும் விஐடியில் பல்வேறு வெளிநாடுகளை சேர்ந்த மாணவர்கள் படிக்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.

விஐடிக்கு சீர்மிகு அந்தஸ்து வழங்கியதற்கு மத்திய அரசுக்கு விஐடி வேந்தர் டாக்டர் கோ. விசுவநாதன் நன்றி தெரிவித்தார்.

### ராம்பாபு கொடாளி

முன்னதாக வி ஐ டி துணை வேந்தர் டாக்டர்.ராம்பாபு கொடாளி அனைவரையும் வரவேற்றார். பட்டமளிப்பு விழாவில் விஐடி துணைத்தலைவர்கள் சங்கர் விசுவநாதன், சேகர் விசுவநாதன், உதவி துணைத்தலைவர் காதம்பரி ச.விசுவநாதன் , இணை துணை வேந்தர் டாக்டர். எஸ்.நாராயணன், பதிவாளர் டாக்டர். கே.சத்திய நாராயணன் பங்கு பெற்றனர். இந்த வருடம் 7444 மாணவ, மாணவிகள் பட்டம் பெறுகின்றனர். இதில் 229 மாணவர்கள் முனைவர் பட்டம் மற்றும் 55 மாணவர்கள் தங்கம் பதக்கம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.



பரோடா வங்கியில் 2 புதிய மண்டல அலுவலகங்களை பிராந்திய மேலாளர் ஆர்.மோகன் துவக்கினார். துணை பொது மேலாளர் கே.வி.சலபதி ராவ், இதர நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# கூடுதல் விரைவான சேவை: புதிதாக திருச்சி, புதுச்சேரியில் பரோடா வங்கியின் மண்டல அலுவலகங்கள்

## பிராந்திய மேலாளர் ஆர்.மோகன் துவக்கினார்

சென்னை, அக். 10

**திருச்சி, புதுச்சேரியில் புதியதாக 2 மண்டல அலுவலகங்களை பரோட வங்கியின் பிராந்திய மேலாளர் ஆர். மோகன் துவக்கினார்.**

இந்தியாவின் முன்னணி பொதுத்துறை வங்கிகளில் ஒன்றான பாங்க்ஆப்பரோடா,மாநிலம்முழுவதும் அதிகமான வாடிக்கையாளர்களை இணைக்க தமிழகத்தில் வேகமாக முன்னேறி வருகிறது. டிஜிட்டல் மயமாக்குதல் நவீன தொழில் நுட்பம் மாற்றியமைப்பதில் வெற்றிகரமாக செயல்பட்டுள்ளது.

இது கூடுதல் வாடிக்கையாளர் இணைப்பைக் கொண்டிருப்பதற்கும், அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சிறந்த மதிப்பைச் சேர்க்கவும் உதவும். வாடிக்கையாளர்கள் இப்போது வங்கி வழங்கும் அனைத்து வங்கி சேவைகளையும் ஆன்லைனில் பெறுவார்கள். மூத்த குடிமக்கள், அரசாங்கத்தால்வழங்கப்படும்வீடுதேடி வந்து வங்கி சேவைகள் வழங்குவது மூலம் கவுரவிக்கப்படுகின்றனர். ஆர். மோகன், ஆன்லைன் விவசாயிகள் கூட்டத்தைநடத்தி பெரியபாளையத்தில் சுய உதவிக்குழு கண்காட்சியை துவக்கினார். பெரியபாளையத்தில் நிதி எழுத்தறிவு முகாம் மற்றும் சுய உதவிக்குழு கண்காட்சியை துணை பொது மேலாளர் (நெட்வொர்க்) கே.வி. சலபதி நாயுடு திறந்து வைத்தார்.

வங்கியின் விலை நிர்ணயம் சந்தையில் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தது. இந்த கடினமான நேரத்தில் வாடிக்கையாளர்களுக்கு வசதியாக, தற்போதைய கோவிட் தொற்றுநோய் காலத்தில் பல வாடிக்கையாளர் சேவை மேம்பாட்டு முயற்சிகளை எடுத்துள்ளது. அண்மையில் விவசாயிகளுக்காக அக்டோபர் 1 முதல் அக்டோபர் 20 வரை “பரோடா விவசாய கடன் திட்டத்தை இந்த வங்கி அறிவித்துள்ளது என்றார்.

"எஸ்.வி.நிதி கடன்" போன்ற பல்வேறு அரசாங்க திட்டங்களும் வங்கிகளால் ஊக்குவிக்கப்படுகிறது. தொடர்ச்சியான தொற்று நோய்களின் போது ஆவணங்கள் மற்றும் நபர்களின் குறைவான உடல் இயக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் கணக்குத் திறப்பு வசதி தயாராக உள்ளது.

இந்த அனைத்து வாடிக்கையாளர் மைய முயற்சிகளிலும், வங்கி தனது சந்தைப் பங்கை அதிகரிக்கும் மற்றும் மாநிலம் முழுவதும் ஆழமான வாடிக்கையாளர் இணைப்பைக் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கிறது.

தற்போதைய திட்டங்களின் நன்மைகளைப் பெறவும், புதிய வாடிக்கையாளர்களை வங்கியில் அறிமுகப்படுத்தவும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் ஆர். மோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.




# ஒடிஷாவில் ராம்கோ சிமெண்ட்ஸ் அரவை ஆலை திறப்பு

சென்னை, அக்.10–

**ஒடிஷா மாநிலம், ஜாஜ்பூர் மாவட்டம், ஹரிதாஸ்பூர் நகரில் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனம் தனது சிமெண்ட் அரவை ஆலையை தொடங்கி உள்ளது.**

இதுகுறித்து அந்நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

புவியியல் ரீதியாக கனிம வளம் மிகுந்த ஒடிஷா மாநிலம் ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் முக்கிய சிமெண்ட் விற்பனை தளமாகவும் விளங்குகிறது. ஆண்டுதோறும் இங்கு பல லட்சம் டன் சிமெண்ட் விற்பனை ஆகிறது.

ஆந்திராவில் உள்ள உற்பத்தி தளத்திலிருந்து ஒடிஷாவுக்கு சிமெண்ட் அனுப்பப்பட்டு வந்தது. வேகமாக வளர்ந்து வரும் அம்மாநிலத்தில் ராம்கோ சிமெண்ட்ஸ் சார்பில் சிமெண்ட்ஸ்அரவை ஆலையை நிறுவ 2017–ம் ஆண்டு முடிவு செய்யப்பட்டது. தற்போது ரூ.710 கோடி செலவில் ஆலை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையை முதல்வர் நவீன் பட்நாயக் நேற்று திறந்துவைத்தார்.

அதிநவீன தொழில்நுட்ப முறைகளுடன், ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட எந்திரங்கள் இங்கு பொருத்தப்பட்டுள்ளன. இந்த ஆலை மூலம் 105 பேர் வரை மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற முடியும். காற்று மாசு, ஒலி மாசு ஏற்படுத்தாத, குறைந்த மின் சக்தியை பயன்படுத்தக்கூடியதாக, பாதுகாப்பானதாக இந்த ஆலை அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதமரின் குறைந்த விலை வீடுகள்: 1 லட்சம் பேருக்கு ரூ.12 ஆயிரம் கோடி கடன் வழங்கியது எல்.ஐ.சி. ஹவுசிங் பைனான்ஸ்

## நிர்வாக இயக்குனர் சித்தார்த்த மொகந்தி தகவல்

சென்னை, அக். 10

**வீட்டு வசதி கடன் வழங்கும் எல்.ஐ.சி. ஹவுசிங் பைனான்ஸ், பிரதமரின் வீட்டு கடன் மானிய திட்டத்தின்படி கடன்தாரருக்கு மானிய தொகை வழங்கியது. இது செப்டம்பர் மாதம் இறுதி வரை 1 லட்சத்து ஆயிரத்து 521 பேருக்கு, ரூ.12 ஆயிரம் கோடிக்கு அதிகமாக குறைந்த விலை வீடு கடன் வழங்கி உள்ளது என்று இதன் நிர்வாக இயக்குனர் சித்தார்த்த மொகந்தி தெரிவித்தார்.**



நாட்டின் மிகப் பெரிய கடன் வழங்கும், மிகப் பெரிய வீட்டுக் கடன் வழங்கும் எல்.ஐ.சி. இந்த திட்டத்தை பரந்த அளவில் வழி நடத்துகிறது. பிரதமரின் அனைவருக்கும் வீடு திட்டத்தின் தகுதியான எங்கள் வாடிக்கையாளர்களுக்கு 2017–ஆம் ஆண்டு தொடங்கி செப்டம்பர் இறுதி வரை ரூ. 2,115 கோடி வீட்டுக் கடன் மானியங்களை நாங்கள் வழங்கியுள்ளோம். இந்த தொகை 1,01,521 கடன் வாங்குபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் மொத்த கடன் ரூ.12,000 கோடிக்கு மேல் உள்ளது, என்றும் சித்தார்த்த மொகந்தி கூறினார்.

நடுத்தரவருமானக்குழுவினருக்கான கடன்இணைக்கப்பட்ட மானியத் திட்டம் 2017–ல் தொடங்கப்பட்டது. அப்போதிருந்து இது பல முறை நீட்டிக்கப்பட்டது 2020 மார்ச் மாதத்தில் முடிவடையும். ஆனால் தொற்றுநோயைத் தொடர்ந்து இது பூஸ்டர் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த ஆண்டு மே மாதம் 2021 மார்ச் வரை நீட்டிக்கப்பட்டது.

நடுத்தர வருவாய் குடும்பங்கள் இரண்டு அடுக்குகளைக் கொண்டிருக்கின்றன ஆண்டு வருமானம் ரூ. 6 முதல் 12 லட்சம் வரை எம்.ஐ.ஜி– 1ம் என்றும், ரூ.12–18 லட்சம் உள்ளவர்கள் எம்.ஐ.ஜி–2ம் ரகத்தில் உள்ளனர்.

வட்டி தள்ளுபடி

1ம் ரக கடன் வாங்கியவர்கள் அரசாங்கத்திடமிருந்து 4 சதவீத வட்டி தள்ளுபடியைப் பெறுகின்றனர், மேலும் ரூ .9 லட்சம் வரை கடன் வாங்கலாம். ரூ. 12 லட்சம் வரை கடன் வாங்கக்கூடிய எம்.ஐ.ஜி– 2 கடன் வாங்குபவர்களுக்கு, மொத்த வட்டி தள்ளுபடி 3 சதவீதமாக கிடைக்கும்.

நகர்ப்புற ஏழைகளுக்கான பிரதமர் அவாஸ் யோஜனாவின் கீழ் ஒரு வீட்டைக் கட்டியெழுப்ப உதவும் திட்டம், 2022–க்குள் அனைவருக்கும் மலிவு விலை வீடுகளை வழங்க திட்டமிட்டுள்ளது என்று தெரிவித்தார்.

# இந்தியன் வங்கியின் சிறு, குறு சொந்த தொழில் துவங்குபவர்களுக்கு ஆன்லைனில் நிதி நிர்வாக பயிற்சி

## மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் துவக்கினார்

சென்னை, அக். 10

**இந்தியன் வங்கி சார்பில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களுக்கான ‘எம்.எஸ்.எம்.இ. பிரிரானா’ என்ற வணிக வழிகாட்டல் திட்டத்தை மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடங்கி வைத்தார்.**



இந்தியன் வங்கி சார்பில் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்களுக்கு இந்த ஆன்லைன் வணிக வழிகாட்டல் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்த திட்டம் உள்ளூர் மொழிகளில் தொழில்முனைவோரின் திறனை மேம்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்டது ஆகும்.

‘பூர்ணதா’ என்ற நிறுவனத்துடன் இணைந்து இத்திட்டம் செயல்படுத்த படுகிறது. இப்பயிற்சியை பெறும் நிறுவனங்களுக்கு பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்கள் நிதி, நிர்வாகத்திறன்களில் கையாளுவதில் நிபுணத்துவம்பெறுவதுஎப்படி?என்பது பற்றியும், வணிகத்தில் நெருக்கடியான காலங்களில் அதனை எப்படி கையாளுவது? என்பது பற்றியும், இயக்கவியல்கடன்மதிப்பீடு(டைனமிக் கிரெடிட் ரேட்டிங்) மற்றும் இடர் மேலாண்மை(ரிஸ்க் மேனேஜ்மென்ட்) பற்றியும் இந்த திட்டம் மூலம் தெரிந்து கொள்ள முடியும். இது ஆன்லைன் மூலம் கலந்துரையாடல் அமர்வுகளாக இருக்கும்.

இந்த திட்டத்துக்கான தொடக்க நிகழ்ச்சி சென்னையில் உள்ள இந்தியன் வங்கியின் கார்ப்பரேட் மையத்தில் நடைபெற்றது. அதில் மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு எம்.எஸ்.எம்.இ. பிரிரானா என்ற இந்த ஆன்லைன் வணிக வழிகாட்டல் திட்டத்தை தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், ‘இந்தியன் வங்கி எடுத்து இருக்கும் இந்த முயற்சியை நான் வெகுவாக பாராட்டுகிறேன். இதனை பார்த்து மற்ற வங்கிகளும் இது போன்ற திட்டத்தை முன்னெடுக்க ஊக்கமளிக்கும் வகையில் இது இருக்கிறது. இந்த தனித்துவமான முயற்சியை முன்னெடுத்த வங்கியின் தலைமை மற்றும் நிர்வாகத்துக்கும் எனது பாராட்டுகளை தெரிவிக்கிறேன்’ என்றார்.

அப்போது இந்தியன் வங்கியின் மேலாண்மை இயக்குனரும், தலைமை செயல் அதிகாரியுமான பத்மஜா சுந்துரு, நிதி சேவைகள் செயலாளர் தேபாஷிஷ் பண்டா, இந்தியன் வங்கியின் செயல் இயக்குனர்கள் எம்.கே.பட்டாச்சார்யா, வி.வி.ஷினாய், கே.ராமச்சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

பத்மஜா சந்துரு பேசுகையில், ‘சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்முனை வோர்கள் வங்கி கடன்களை எப்படி பயன்படுத்துவது?, அவற்றை தொழில்க ளில் எப்படி முதலீடு செய்வது?, கடன் வாங்கும்போது வங்கிகள் என்னென்ன கேட்கிறது? அரசின் திட்டங்களில் தங்களுடைய தொழில்களுக்கான திட்டங்கள் எது? என்பது பற்றி தெரிந்து கொள்வதற்கு அவர்களுக்கு மொழி ஒரு தடையாக இருக்கிறது. அதற்கு ஒரு பாலமாக இந்த திட்டம் இருந்து வணிக வழிகாட்டுதல்களை அளிக்கும்’ என்றார்.



# மஹிந்திராவின் ‘ட்ரியோ’ மின் ஆட்டோ விற்பனை 5 ஆயிரத்தை கடந்து சாதனை

சென்னை, அக்.10

**மஹிந்திரா நிறுவனத்தின் முதல் மின்சார ஆட்டோவான ‘ட்ரியோ’ வகை ஆட்டோ விற்பனை 5 ஆயிரத்தை கடந்து சாதனை படைத்துள்ளது என்று தலைமை செயல் அதிகாரி மகேஷ்பாபு தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து மஹிந்திரா எலெக்ட்ரிக் நிறுவன நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை செயல் அதிகாரி மகேஷ்பாபு கூறியதாவது:–நாடே மின் வாகன பயன்பாட்டுக்கு மாறிவரும் நிலையில், லித்தியம் அயர்ன் பாட்டரி உதவியுடன் மின்சக்தியில் இயங்கும் ‘ட்ரியோ’ வகை ஆட்டோ பொருளாதார ரீதியாகவும், சுற்றுச்சூழலுக்கும் ஏற்ற நீடித்த தன்மை கொண்டதாக விளங்குகிறது.

தற்போது 400–க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் விற்பனையாகும் ‘ட்ரியோ’ விற்பனை 5 ஆயிரத்தை கடந்துள்ளது. இதுவரை இவ்வகை ஆட்டோக்கள் 3.5 கோடி கி.மீ. தூரம் சாலைகளில் பயணித்துள்ளன. இதன்மூலம் 1,925 மெட்ரிக் டன் கார்பன்டைஆக்ஸைடு வெளியேற்றம் தடுக்கப்பட்டுள்ளது என்றார்.

தனித்தன்மையான ஸ்டைல், சிறந்த செயல்திறன் கொண்ட ட்ரியோ ஆட்டோ மூலம் ஆண்டுக்கு ரூ.45 ஆயிரம் வரை சேமிக்க முடியும். ஒருமுறை சார்ஜ் செய்தால் 265 கி.மீ. வரை பயணம் செய்யும் இந்த வகை ஆட்டோக்களை எங்கு வேண்டுமானாலும் மீண்டும் சார்ஜ் செய்துகொள்ளலாம்.

இந்த ஆட்டோவில் உள்ள லித்தியம் அயர்ன் பாட்டரி 1.5 லட்சம் கி.மீ. வரை ஓடும் ஆற்றல் கொண்டது. பெரிய வீல்பேஸ் இருப்பதால், விசாலமான கேபின் கொண்டதாக இந்த ஆட்டோக்கள் விளங்குகின்றன. 12.7 டிகிரி சாய்தளத்திலும் இவை சுலபமாக ஏறக்கூடியவை. இந்த வகை ஆட்டோக்கள் 3 ஆண்டுகள் அல்லது 80 ஆயிரம் கி.மீ. தூரத்துக்கான நிலையான உத்தரவாதத்துடனும், 2 ஆண்டுகள் மற்றும் ஒரு லட்சம் கி.மீ தூரத்துக்கான நீட்டிக்கப்பட்ட உத்தரவாதத்துடனும் கிடைக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்..

# முல்லை பெரியாறு துணை குழுவை கலைக்க வேண்டிய அவசியம் இல்லை

## உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு பதில் மனுதாக்கல்

**சென்னை, அக்.10–**

**முல்லை பெரியாறு துணை குழுவை கலைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு பதில் மனுதாக்கல் செய்துள்ளது.**

முல்லைப் பெரியாறு அணை பாதுகாப்பு, பராமரிப்பு தொடர்பாக முல்லைப் பெரியாறு அணையை ஆய்வு செய்து அதன் பாதுகாப்பை உறுதி செய்ய அமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவால் ஏற்படுத்தப்பட்ட துணைக்குழுவைக் கலைக்கக் கோரி கேரள மாநிலத்தைச் சேர்ந்த மருத்துவர் ஜோசப், ஷீலா கிருஷ்ணன்குட்டி, ஜெஸ்ஸிமோள் ஜோஸ் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இதுகுறித்து தமிழக அரசு பதிலளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அந்த வழக்கில் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் இன்று பதில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

தமிழக அரசு அளித்த பதில் மனுவில், “முல்லைப் பெரியாறு துணைக்குழுவைக் கலைக்க வேண்டிய அவசியமில்லை. பிரதான குழு இந்த விவகாரத்தில் எடுக்கும் அனைத்து முடிவுகளின் அடிப்படையில்தான் துணைக்குழு முறையாகச் செயல்படுகிறது. அதனால் முல்லைப் பெரியாறு அணைக் குழுவைக் கலைக்க வேண்டாம்.

**அணை பலமாக உள்ளது**

உச்ச நீதிமன்றம் வழங்கிய உத்தரவின் அடிப்படையில்தான் பிரதான குழுவும் செயல்பட்டு வருகிறது. முல்லைப் பெரியாறு அணை பலமாக உள்ளது. நிலநடுக்கம் உள்ளிட்ட இயற்கைச் சீற்றங்களைத் தாங்கும் வகையில் பலமாகவுள்ளது. அணையின் பாதுகாப்பை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி மேற்பார்வைக் குழு கண்காணித்து வருகிறது.

மேற்பார்வைக் குழு தனது பணியை முழுமையாக துணைக்குழுவிடம் ஒப்படைத்துள்ளது என்ற குற்றச்சாட்டை ஏற்க முடியாது. ஏனெனில் துணைக்குழு ஒரு உதவிக்காகவே அமைக்கப்பட்டுள்ளது.

முல்லைப் பெரியாறு அணை பலமாக உள்ளது என மத்திய நீர் ஆணையம் ஏற்கெனவே தெரிவித்தது. ஏனெனில் அணை எத்தனை ஆண்டுகள் பழமையானது என பார்க்கக்கூடாது, ஏனெனில் அது முறையாக பராமரிக்கப்படும் வரை அணை பலமாக இருக்கும். முல்லைப் பெரியாறு அணையை விடப் பழமையான அணைகள் உலகின் பல நாடுகளில் செயல்பாட்டில் உள்ளன.

கேரள வெள்ளப்பெருக்கின்போது அணைதிடீரென முன்னறிவிப்பு இன்றி திறக்கப்பட்டதாகக் கூறுவது தவறு. நீர் அரை அடி அதிகரிக்கும்போதெல்லாம் உரிய தகவல் தெரிவிக்கப்பட்டது. நீர் திறப்பு அதிகரிக்கும்போதும் தகவல் பரிமாறப்பட்டது.

கேரளாவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது, முல்லைப் பெரியாறு அணையின் நீர் மட்டம் 131 அடியாகவே இருந்தது'' எனத் தெரிவித்துள்ளது.



முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் நடிகை விந்தியா நேரில் சந்தித்து பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றார்.

## இம்மாதம் 31–ந் தேதி வரை விண்ணப்பிக்கலாம்

# தட்கல் மின் இணைப்பு: 30 ஆயிரம் விவசாயிகள் விண்ணப்பம்

## அமைச்சர் பி.தங்கமணி பேட்டி

**நாமக்கல், அக்.10–**

**தட்கல் மின் இணைப்பு கோரி 30 ஆயிரம் பேர் விண்ணப்பித்துள்ளதாக அமைச்சர் பி. தங்கமணி தெரிவித்துள்ளார்.**

நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்க வந்த மின்சாரத்துறை அமைச்சர் பி.தங்கமணி செய்தியாளர்களிடம் கூறியதாவது:–

தமிழகத்தில் விவசாயிகளுக்கு தட்கல் முறையில் மின் இணைப்பு வழங்கும் வகையில் மின்வாரிய அலுவலகங்களில் விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன. வரும் 31ம் தேதி வரை இந்த விண்ணப்பங்கள் பெறப்படும். விவசாயிகள் ஆர்வமுடன் விண்ணப்பித்து வருகின்றனர். இதுவரை சுமார் 30 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

விவசாயிகள் யாரிடமும் விண்ணப்பங்கள் பெறமாட்டோம் என மின்வாரிய அதிகாரிகள் தெரிவிக்கக் கூடாது. அக்டோபர் 31 வரை ஒவ்வொரு மின்வாரிய அலுவலகத்திலும் விண்ணப்பங்கள் பெறப்படவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. 11 பேர் கொண்ட வழிகாட்டுதல் குழு தொடர்பான நடவடிக்கைகள் குறித்து கட்சித் தலைமை தகவல் அளிக்கும் என தெரிவித்தார்.

# தங்கம் விலை இன்று ரூ.39 ஆயிரத்தை தாண்டியது

**சென்னை, அக்.10**

**சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு 248 ரூபாய் உயர்ந்து 39 ஆயிரத்து 48 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.**

தங்கம் விலையில் கடந்த சில நாட்களாகவே ஏற்ற, இறக்கம் காணப்பட்டு வருகிறது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலரின் மதிப்பு மற்றும் பொருளாதார நிலையில் ஏற்ற, இறக்கம் ஆகியவற்றுக்கு ஏற்ப தங்கத்தின் விலை சந்தையில் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது.

சென்னையில் ஆபரண தங்கத்தின் (22 கிராட்) விலை பவுனுக்கு இன்று ரூ.248 உயர்ந்து உள்ளது. இதன்படி ஒரு பவுன் தங்கம் ரூ.39 ஆயிரத்து 48 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு 31 ரூபாய் உயர்ந்து 4 ஆயிரத்து 881 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சென்னையில் ஒரு கிராம் வெள்ளியின் விலை 1 ரூபாய் 70 காசு உயர்ந்து 66 ரூபாய் 70 காசுகளாகவும், ஒரு கிலோ வெள்ளி ரூ. 66 ஆயிரத்து 700 ஆகவும் விற்பனை செய்யப்படுகிறது.

# பெண்களுக்கு எதிரான குற்றங்கள்: கடும் நடவடிக்கை எடுக்க மாநில அரசுகளுக்கு மத்திய அரசு உத்தரவு

புதுடெல்லி, அக்.10–

பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கும்படி, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

உத்தர பிரதேச மாநிலம் ஹத்ராஸ் மாவட்டத்தில் இளம்பெண் ஒருவர் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. நீதி கேட்டு எதிர்க்கட்சியினரும், பெண்கள் அமைப்பினரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து பெண்களின் பாதுகாப்பு தொடர்பாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் 3 பக்கங்களைக் கொண்ட புதிய அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளது.

இது தொடர்பாக மத்திய அரசு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:–

பெண்களுக்கு எதிராக பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றங்களில் தொடர்ந்து ஈடுபடுவோர்களின் விவரங்களை மாநில அரசு பாதுகாத்து வைக்க வேண்டும். வன்கொடுமை உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுவோர்கள் மீது வழக்குப்பதிவு செய்து தடயங்களை சேகரிக்க வேண்டும்.

வழக்குகளை உரிய நேரத்தில் முடித்து குற்றவாளிகளுக்கு சரியான நேரத்தில் தண்டனை பெற்றுத்தர வேண்டும். நடவடிக்கை எடுக்காமல், இருப்பதால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைப்பதில் பாதிப்பு ஏற்படக்கூடாது.

பெண்களுக்கு எதிரான குற்றங்களின் விசாரணையின் போது தவறுகள் நடப்பது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். காவல் நிலைய எல்லைக்கு உட்படாத பகுதியில் நடந்த குற்றங்களுக்கு உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனையின்படி, ஜீரோ எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட வேண்டும். இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

# உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடமாட்டோம்: வைகோ அறிவிப்பு

**சென்னை, அக்.10–**

**சட்டசபைத் தேர்தலில் மதிமுக தனி சின்னத்தில்தான் போட்டியிடும் என்று பொதுச்செயலாளர் வைகோ கூறி உள்ளார்.**

திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் மதிமுக போட்டியிட உள்ளதா என்ற கேள்விக்கு அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறியதாவது:–

அந்த பேச்சுக்கே இடமில்லை. தனித்தன்மையுடன் போட்டியிடுவோம்.

நான் லட்சியத்திற்காக வாழ்பவன் என்பது லட்சக்கணக்கான என் தொண்டர்களுக்கு தெரியும். என்னைப்பற்றி ஒரு சில நாளிதழ்கள் நஞ்சை கக்கி வருகின்றன, அதில் எள்ளளவும் உண்மையில்லை. திமுக சின்னமான உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட ஒப்புக்கொண்டதாக வெளியானதகவலில்உண்மையில்லை என மறுத்த வைகோ, வரும் 2021 சட்டப்பேரவை தேர்தலில் மதிமுக தனிச் சின்னத்தில்தான் போட்டியிடும் என திட்டவட்டமாக தெரிவித்தார்.

# கடலூரில் உலக மனநல தினம்: கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி சைக்கிள் பேரணி

**கடலூர், அக். 10–**

**உலக மனநல தினத்தை முன்னிட்டு மனநோய்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கடலூர் டவுன்ஹால் அருகி மாவட்ட கலெக்டர் சந்திரசேகர் சாகமூரி சைக்கிள் பேரணியை தொடங்கி வைத்தார். மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கடலூர் டவுன்ஹாலிலிருந்து சாவடி வரை சைக்கிளில் பயணம் செய்து மீண்டும் கடலூர் டவுன்ஹால் வந்தடைந்தார்.**



உலக சுகாதாரத்துறையின் பரிந்துரையின்படி அக்டோபர் 10 சர்வதேச அளவில் உலக மனநல தினமாக கொண்டாடப்படுகிறது. அதனைத் தொடர்ந்து பல்வேறு மனநலம் சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மனநல ஆராய்ச்சிகள் மொத்த மக்கள் தொகையில் 1 சதவிகிதம் தீவிர மனநோயினாலும், 10–15 சதவிகிதம் மற்ற மனநல நோய்களாலும் பதிக்கப்பட்டுள்ளனர் என கண்காணிக்கப்படுகிறது.

சமுதாய விழிப்புணர்வு மற்றும் கல்வி மூலம் மனநோய் பற்றிய தவறான எண்ணங்களை அகற்றுதற்காகவே இந்த விழிப்புணர்வு பேரணி நடத்தப்படுகிறது. இப்பேரணி பொதுமக்களுக்கு மனநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கடலூர் டவுன்ஹாலில் புறப்பட்டு சாவடி வரை சென்று மீண்டும் கடலூர் டவுன்ஹால் வந்தடைந்தது. மேலும் இப்பேரணியில் கலந்து கொண்ட என்.எஸ்.எஸ் மாணவர்களுக்கு சான்றிதழ்களை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (மருத்துவம்) ரமேஷ்பாபு, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பாலசுந்தரம், மருத்துவ கண்காணிப்பாளர் சாய்லீலா, அரசு தலைமை மருத்துவமனை நிலைய மருத்துவ அதிகாரி குமார், மாவட் என்.எச்.எம் அலுவலர் பரிமேலழகர், மாவட்ட மனநல திட்ட அலுவலர் சத்தியமூர்த்தி, மனநல மருத்துவர்கள் கலையரசி, அஸ்வின், சிலம்பரசன், என்.எஸ்.எஸ் மாவட்ட தொடர்பு அலுவலர் திருமுருகன், ஒருங்கிணைப்பாளர் சந்தானம் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# மகன்கள் அடித்து விரட்டியதால் கமிஷனர் அலுவலகத்தில் தஞ்சம் அடைந்த 75 வயது மூதாட்டி

**சென்னை, அக். 10–**

**மகன்கள் அடித்து விரட்டியதால் 75 வயது மூதாட்டி சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் தஞ்சமடைந்தார்.**

சென்னை, ஓட்டேரி, கொசப்பேட்டை பகுதியை சேர்ந்த வயதான மூதாட்டி பேபியம்மாள் (வயது 75). இவருக்கு 5 மகன்கள், 4 மகள்கள் உள்ளனர். இவரது கணவர் பார்த்தசாரதி. ரவுடியான இவர்க கடந்த 20 வருடத்திற்கு முன்பு கொலை வழக்கில் சிறை தண்டனை அனுபவித்து ஜாமினில் வந்தவர் சமீபத்தில் காலமாகி விட்டார்.



பேபியம்மாளுக்கு சொந்தமாக சென்னை, கொசப்பேட்டை, மார்க்கெட் பகுதியில் 1 கிரவுண்ட் வீடு ஒன்று உள்ளது. இந்த வீட்டில் பேபியம்மாள் அவரது மகன்களுடன் ஒன்றாக வசித்து வந்தார். இந்நிலையில் மகன்கள் அவர்களது மனைவியுடன் சேர்ந்து பேபியம்மாளுக்கு உணவு கொடுக்காமல் வீட்டை விட்டு வெளியே போக சொல்லி அடித்து துன்புறுத்தி வந்துள்ளனர்.

இது தொடர்பாக பேபியம்மாள் கடந்த 2 வருடத்திற்கு முன்பு ஓட்டேரி போலீசில் புகார் அளித்தார். ஆனால் கடந்த 2 வருடங்களாகியும் எந்த விதமான நடவடிக்கையும் போலீசார் எடுக்காததால் முதியவர் பென்சனை வைத்துக் கொண்டு வீட்டின் மாடியில் தங்கி வந்துள்ளார். ஆனால் தொடர்ந்து பேபியம்மாளை அவரது வாரிசுகள் கொடுமைப்படுத்தியதால் அவர் துன்பப்பட்டு வந்துள்ளார்.

கடந்த 2 ஆண்டுகளாகியும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்காமல் அலைகழித்து வந்ததால் பேபியம்மாள் வேறு வழியின்றி நேற்று போலீஸ் கமிஷனரை சந்தித்து முறையிடுவதற்காக வேப்பேரி போலீஸ் கமிஷனர் அலுவலகத்துக்கு வந்தார். ஆனால் போலீசார் அவரை பேட்ரோல் வாகனத்தில் ஏற்றி வேப்பேரி போலீஸ் நிலையத்துக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவரிடம் மகளிர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜம்மு காஷ்மீரில் இன்று 2 பயங்கரவாதிகள் சுட்டுக் கொலை

**ஜம்மு, அக்.10–**

**ஜம்மு மற்றும் காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் நடத்திய தாக்குதலில் 2 அடையாளம் தெரியாத பயங்கரவாதிகள் சுட்டு கொல்லப்பட்டனர்.**

ஜம்மு மற்றும் காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் சிங்காம் பகுதியில் பயங்கரவாதிகள் பதுங்கி உள்ளனர் என பாதுகாப்பு படையினருக்கு உளவு தகவல் கிடைத்தது. இதனை தொடர்ந்து, படையினர் அந்த பகுதியை சுற்றி வளைத்து தங்களது வளையத்துக்குள் கொண்டு வந்தனர்.

இதன்பின் பயங்கரவாதிகளை தேடும் பணியில் ஈடுபட்டனர். இதில் பயங்கரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர். வீரர்கள் தரப்பிலும் பதிலடி தரப்பட்டது. இதனை தொடர்ந்து நடந்த சண்டையில் 2 பயங்கரவாதிகள் சுட்டு கொல்லப்பட்டனர். அவர்களை அடையாளம் காணும் பணி நடந்து வருகிறது என காஷ்மீர் மண்டல போலீசார் தெரிவித்து உள்ளனர்.

இதேபோல அக்டோபர் 7–ந் தேதி ஷோபியான் மாவட்டத்தில் உள்ள சுகான் ஜெயினாபோரா என்னும் இடத்தில் நடந்த என்கவுண்டரில் 3 பயங்கரவாதிகளும், செப்டம்பர் 27–ந் தேதியன்று அவநிதிபோரா மாவட்டத்தில் சம்பூரா என்னுமிடத்தில் நடந்த என்கவுண்டரில் 2 பயங்கரவாதிகளும் கொல்லப்பட்டது நினைவிருக்கலாம்.

# துரோகம் செய்ததாக மனைவி தலையை வெட்டிக்கொண்டு போலீசுக்கு சென்ற கணவன்

**லக்னோ, அக்.10–**

**உத்திரபிரதேச மாநிலத்தில் மனைவி துரோகம் செய்ததாக கூறி, கணவன், மனைவி தலையை வெட்டிக்கொண்டு காவல் நிலையம் சென்றுள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.**

கணவன் மனைவிக்கிடையே எழக்கூடிய பிரச்சினைகள் சுமூகமாக முடிய கூடிய காலம் தற்போது கிடையவே கிடையாது. இந்நிலையில் உத்திரபிரதேச மாநிலத்திலுள்ள பாந்தா எனும் மாவட்டத்தில் சின்னார் யாதவ் என்பவர் தனது மனைவி விமலா உடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார். வாக்குவாதம் முற்றவே கோபத்தில் தனது மனைவி விமலா தலையை துண்டித்து உள்ளார்.

மனைவி தனக்கு துரோகம் செய்துவிட்டதாகக் கூறி சண்டையிட்ட யாதவ் அதன்பின் மனைவியின் தலையை எடுத்துக் கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு நடந்து சென்று நடந்தவற்றைக் கூறி சரணடைந்துள்ளார்.



அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ. பன்னீர்செல்வத்தை அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளர் தமிழ்மகன் உசேன் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

# டிக்டாக் பிரபலம் ஜி.பி. முத்து தற்கொலை முயற்சி

**உடன்குடி, அக்.10–**

**டிக்டாக் பிரபலம் ஜி.பி. முத்து தீராத வயிற்று வலியால் தற்கொலைக்கு முயன்றுள்ளார்.**

தூத்துக்குடி மாவட்டம் உடன்குடியை சேர்ந்தவர் ஜி.பி. முத்து. டிக்டாக் செயலியில் பல்வேறு வீடியோக்களை வெளியிட்டு பிரபலமடைந்தவர். டிக்டாக் வீடியோக்களால் பலரை ரசிக்க வைத்த இவருக்கு என தனி ரசிகர்கள் பட்டாளம் உள்ளது.

டிக்டாக் செயலி மூலம் வெளி உலகிற்கு பிரபலம் ஆனவர்கள் ஏராளம். அந்த வகையில், எளிய, யதார்த்த பேச்சால் மக்களை ஈர்த்தவர் ஜிபி முத்து. இவரைபொறுத்தவரையில் தன்னுடைய மரக்கடை தொழிலே 2வது தானாம். முதலில் டிக்டாக் தான். சாப்பிடுவது, தூங்குவது என அனைத்து விஷயத்தையும் டிக்டாக்கில் போட்டு வந்தார். இவரது நடவடிக்கைகளால் குடும்பத்திற்குள் சண்டை ஏற்பட்டு உள்ளது. இவரின் மனைவி மற்றும் குழந்தைகளிடம் வெறுப்பு ஏற்பட்டு உள்ளது. இதுபற்றி அவரே வீடியோ பதிவு செய்து வெளியிட்டார். குறிப்பிட்ட சாதிக்கு எதிராக வீடியோ வெளியிட்டதற்காக இவர் மீது முதலமைச்சரின் தனி பிரிவுக்கு புகாரும் அளிக்கப்பட்டு உள்ளது.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இந்திய இறையாண்மைக்கு எதிராக உள்ளதென்று, டிக்டாக் உட்பட 59 சீன ஆப்களுக்கு இந்திய அரசு தடை விதித்திருந்தது. இதனால் ஜி.பி.முத்து சோகமே வடிவாக காணப்பட்டார். இந்த நிலையில், சில காலமாக கடும் வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்த ஜி.பி.முத்து தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளார். உயிருக்கு ஆபத்தான நிலையில் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# இந்தியாவில் கொரோனாவிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 60 லட்சத்தை நெருங்குகிறது

**புதுடெல்லி, அக்.10–**

**இந்தியாவில் கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 59 லட்சத்து 88 ஆயிரத்து 823 ஆக உள்ளது.**

இந்தியாவில் கொரோனா பாதிப்புகள் நாளுக்கு நாள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

மத்திய சுகாதார அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள செய்தியில், இந்தியாவில் கடந்த 24 மணிநேரத்தில் 73,272 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை

69 லட்சத்து 79 ஆயிரத்து 424 ஆக உயர்ந்து உள்ளது.

கொரோனா பாதிப்புகளுக்கு 926 பேர் மரணமடைந்து உள்ளனர். உயிரிழந்தோர் மொத்த எண்ணிக்கை 1 லட்சத்து 7 ஆயிரத்து 416 ஆக உள்ளது.

நாடு முழுவதும் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 59 லட்சத்து 88 ஆயிரத்து 823 ஆக உள்ளது. ஒரே நாளில் 82 ஆயிரத்து 753 பேர் குணமடைந்து வீடு திரும்பி உள்ளனர். நாடு முழுவதும் சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 8 லட்சத்து 83 ஆயிரத்து 185 ஆக குறைந்து உள்ளது.

இந்தியாவில் நேற்று ஒரே நாளில் 11 லட்சத்து 64 ஆயிரத்து 18 மாதிரிகள் கொரோனா பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாக ஐ.சி.எம்.ஆர் தெரிவித்துள்ளது. இதுவரை இந்தியாவில் 8 கோடியே 57 லட்சத்து 98 ஆயிரத்து 698 மாதிரிகள் சோதனை செய்யப்பட்டுள்ளன.

Edited, Printed and Published by R. Muthu Kumar at No. 1, First Main Road, United India Colony, Kodambakkam, Chennai-600 024 and printed at Print House, 1 First Main Road, United India Colony, Kodambakkam, Chennai 600024 on behalf of M/s. Newsmen Associates Limited.
நிர்வாகம், விளம்பரம், சர்குலேஷன் போன்: 24733900, 24733910, E–mail : makkalkural@gmail.com, ஆசிரியர் குழு: 24734700, பேக்ஸ்: 24732700, 24735700 இமெயில்: makkalkural.news@gmail.com நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல்